ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 450) Sep (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..5

3. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)..26

4. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)..40

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 268)

105. தத்ஸ்த ஏவ ஸ்வகம் பிண்டம் ஸம்தஹேத்வாரணாக்நிநா
சிதாசுசுக்ஷணேஸ்தேஜ: புஞ்ஜமர்சி: கணாலயம்

பொருள் – அந்த தத்துவத்தில் நிலைத்திருந்து, தாரணையின் (தியானத்தின்) அக்கினியால் தனது உடலை (பிண்டம்) எரிக்கவேண்டும். சித்தமானது, அந்த அக்னி துகள்களின் இருப்பிடமாகவும், ஒளியின் கூட்டமாகவும் இருப்பதைக் காணலாம்.

106. பததம் ஸம்ஸ்மரேந் மூர்த்நி பிண்டம் ப்ரஜ்வலிதம் தத:
சாந்தமந்த:ஸ்தஸத்ஸத்த்வம் பஸ்மீபூதரஜஸ்தமம்

பொருள் – பின்னர் அந்த அக்னியானது தலையின் உச்சியில் விழுந்து, உபாஸகனுடைய சரீரத்தை எரிப்பதாகக் கொள்ளவேண்டும். அப்போது உள்ளே இருக்கும் தூய்மையான ஸத்வம் நிலைப்பதாகவும், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவை சாம்பல் ஆகியதாகவும் எண்ணவேண்டும்.

107. ரஜஸ்தமோமயம் பஸ்ம த்வபோஹ்யோத்போதவாயுநா
சிதாநந்தமஹாம்போதேரதரங்க குணாகராத்
108. ப்ரஸ்ருதம் ஸ்ருஷ்டி மார்கேண ஸம்ஸ்மரேதம்ருதோதகம்
தேநாப்யாயிதமந்த:ஸ்தம் தத் ஸத்த்வம் தேஹதாம் நயேத்

பொருள் – உபாஸகன், அறிவு என்னும் வாயுவின் மூலம் ரஜோ மற்றும் தமோ குணங்களின் சாம்பலை நீக்கி, உள்ளிருக்கும் ஆனந்தமயமான ஞானக்கடலிலிருந்து வெளிப்படும் அமிர்தம் போன்ற நீரை நினைக்கவேண்டும்.

அது, அலைகள் அற்றும், அனைத்து குணங்களுக்கு ஆதாரமாகவும் உள்ளதாகும். இப்படியாக நிலை பெற்ற அந்த ஸத்த்வத்தால், தனது சரீரம் உண்டாகிறது என உணரவேண்டும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

… தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 415)

6-7-2. ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் அவனுடைய
பேரும் தார்களுமே பிதற்றக் கற்பு வான் இடறி
சேரும் நல் வளம்சேர் பழனத் திருக்கோளூர்க்கே
போரும் கொல் உரையீர் கொடியேன் கொடி பூவைகளே

பொருள் – தான் இருந்த ஊர், அதனுடன் சேர்ந்துள்ள நாடும், இந்த நாடுள்ள உலகம் ஆகிய அனைத்துமே தன்னைப் போன்று அவனுடைய திருநாமங்களையும் மாலைகளையும் குறித்துப் பிதற்றும்படியாக; விண்ணளவு உள்ள பெண்மைக்குரிய தன்மையையும் இழந்தவளாக; மேன்மையான வளப்பம் பொருந்திய நீர் நிலைகள் கொண்டதான திருக்கோளூருக்குச் சென்று சேர்ந்த என் பெண்பிள்ளையானவள், அவளைப் பிரிவதற்கான கொடுமை கொண்ட என்னிடம், அவனை விட்டு தரிக்க இயலாத கொடி போன்ற இவள், மீண்டும் திரும்புவாளோ?

அவதாரிகை – "திருக்கோளூர்க்கே போய்ப் புக்க என் பெண்பிள்ளை மீளவருமோ? சொல்லிகோள்!" என்று பூவைகளைத் திருத்தாயார் கேட்கிறாள்.

விளக்கம் – "திருக்கோளூர் சென்ற எனது பெண்பிள்ளை மீண்டும் வருவாளோ? நீங்கள் கூறவேண்டும்", என்று பூவைப்பறவைகளை (மைனாக்கள்) திருத்தாயார் கேட்கிறாள்.

வ்யாக்யானம் - (ஊரும் நாடும் இத்யாதி) இவ்விருப்பில் என்ன குறையுண்டு? இங்கே ஒரு குறையுண்டாய், அங்கே அது தீரப் போனாளோ? இங்கே, "போதயந்த: பரஸ்பரம்" பண்ணுகைக்கு ஆளில்லாமை, "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:" என்றொரு தேச விசேஷந் தேடிப் போனாளோ? "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று அவன் அங்குள்ளாரைத் தன்னோடு ஸாம்யாபந்நராம்படி பண்ணிறாற் போலேயாகாதே, இங்குள்ளாரை இவள் தன்னோடொக்கப் பண்ணினபடி.

விளக்கம் – (ஊரும் நாடும் இத்யாதி) - இங்கு உள்ளதில் அவளுக்கு என்ன குறை உள்ளது? இங்கு என்ன ஒரு குறை உள்ளது என்று எண்ணி, அதனைத் தீர்ப்பதற்காகத் திருக்கோளூர் சென்றாள்? இந்த ஊரில், கீதை (10-9) - போதயந்த: பரஸ்பரம் – ஒருவருக்கொருவர் பகவத் அனுபவம் குறித்து அறிவித்துக் கொண்டு – என்பதற்கு ஏற்றபடி யாரும் இல்லை என்று, புருஷஸூக்தம் - யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா: - எங்கு நித்யஸூரிகள் உள்ளனவோ – என்று கூறுவதற்கு ஏற்ப, அவனைக் குறித்து ஓதியபடி உள்ளவர்கள் இருக்கும் சிறப்பான திவ்யதேசத்தைத் தேடிச் சென்றாளோ? "தன்னைபோல்" என்பதற்கான விளக்கம் கூறுகிறார். முண்டக உபநிஷத்தில் (3-1) - நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி - தோஷம் விலகி அவனுடன் ஒப்புமை செய்வதற்கு – என்று கூறுவதற்கு ஏற்ப, அவன் அங்கு உள்ளவர்கள் அனைவரையும் தன்னுடன் ஒப்புமை அடையலாம்படிச் செய்கிறான்; இதனைப் போன்று அவள் அங்கு உள்ளவர்களை தன்னுடன் ஒப்புமை அடையும்படிச் செய்கிறாள்.

வ்யாக்யானம் – (ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போல்) தானிருந்தவூரும், அத்தோடு தோள்தீண்டியான நாடும், அத்தோடு சேர்ந்த லோகமும். ராமாவதாரத்திலும் ஒரூரேயிறே திருந்திற்று; இங்கு ஸம்ஸாரமாகத் திருந்திற்றுக்கிடீர் என்கை. இன்று நம்மளவும் வரவேறிப் பாயும்படியிறே இவள் ஸம்பந்தம் வெள்ளமிட்டபடி. "லோகேவதீர்ண பரமார்த்த ஸமக்ர பக்தியோகாய" என்னும்படியே எல்லா மேடுகளிலும் ஏறிற்றென்கை.

விளக்கம் – (ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போல்) - தான் இருந்த ஊரும், அதனை உள்ளடக்கிய நாடும், அதனுடன் சேர்த்த உலகமும். இராமாவதாரத்தின்போது ஒரு ஊர் மட்டுமே நேர்வழிப்பட்டது. ஆனால் இங்கு ஸம்ஸார உலகம் முழுவதும் திருந்தியது. அவ்விதம் திருந்தியதோ என்பதற்கு

விடை அளிக்கிறாள்; இன்று நம்மளவு வரும்வரை பாயும்படி அல்லவோ இவளுடைய ஸம்பந்தம் உள்ளது. இவ்விதம் ஸம்ஸாரம் திருந்துவதால், ஆழ்வாருடைய க்ருபைக்கு மேடாக இருந்து தடை ஏற்படுத்துபவர்கள் இல்லை என்பதை கூறுகிறார். ஸ்தோத்ரரத்னம் (3) - லோகேவதீர்ண பரமார்த்த ஸமக்ர பக்தியோகாய - இந்த உலகில் அவதாரம் செய்துள்ளவரும், மிகுந்த பயன் அளிப்பவராகவும், பூர்ணமாக உள்ள பக்தி கொண்டவரும், யோகிகளில் உயர்ந்தவரும் - என்பதற்கு ஏற்ப அனைத்து மேடுகளிலும் ஏறியது என்பது கருத்து.

வ்யாக்யானம் - (ஊரும் நாடுமித்யாதி) "காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின் வரவு சொல்லி" ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே திர்யக்குக்களுங்கூட எழுந்திருந்து, அவன் இவள்பக்கல் பிச்சேறி வரும்படியைச் சொல்லா நின்றன. தானிருந்தவிடத்தே செல்ல வேண்டுமவன் இவளிருந்த இடத்தேற வரும்படியைச் சொல்லி. (தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்ற) அவன் "மயர்வற மதிநலமருள" வந்த பிதற்றிறேயிவளது! இவள்தான் அடியாக வந்த பிதற்றிறே யிவர்களது! (பிதற்ற) நினைத்துச் சொல்லுகையன்றியே, பகவத் குணங்களிலே யவகாஹித்து உணர்த்தியற்றுச் சொல்லும்படியாகப் பண்ணி. (அவனுடைய பேருந்தார்களும்) "சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்" என்பது, "தேவதேவபிரான்" என்பது, "விரைமட்டலர் தண்டுழாய்" என்பதாகை. (பிதற்ற) "ச்ருதோயமர்த்தோ ராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:" என்கிறபடியே.

விளக்கம் – (ஊரும் நாடுமித்யாதி) - இவ்விதம் திருந்தியதன் எல்லையைக் கூறுகிறார். நாச்சியார் திருமொழி (9-8) – காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின் வரவு சொல்லி – என்பதன் பொருளைக் கூறுகிறார்; ப்ரம்ம முகூர்த்தத்தில் விலங்குகளும் கூட எழுந்திருந்து, அவன் பிச்சேறி இவளிடம் வருவதைத் தெரிவித்தபடி இருந்தன. அதாவது தான் உள்ள இடத்திற்கு அனைவரும் வரும்படியாகச் செய்யவல்ல அவன், இவள் இருந்த இடம் தேடி வந்த நிலையைக் கூறி. (தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்ற) – "மயர்வற மதிநல அருளப் பெற்ற" தன்னைப் போன்று, ஊரும் நாடும் உலகமும் பிதற்றியபடி உள்ளதன் காரணம் என்ன என்பதற்கு விடை அளிக்கிறார்; அவன், "மயர்வற மதிநலம் அருள" வந்த பிதற்றுதல் அல்லவோ இவளுடையது; இவளுடைய பிதற்றுதல் காரணமாக வந்து பிதற்றுதல் அல்லவோ

மற்றவர்களுடையதாக உள்ளது! (பிதற்ற) - பிதற்றுதல் என்பது, நினைத்துக் கூறுதல் மட்டும் அல்லாமல், பகவானுடைய கல்யாண குணங்களில் மூழ்கி, தன் நிலை மறந்து உரைத்தல். (அவனுடைய பேருந்தார்களும்) – "பேரும் தார்களும்" என்பதற்கு பொருள் கூறுகிறார்; இதன் பொருளானது திருவாய்மொழி (4-2-9) – சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும் – என்பதும், திருவாய்மொழி (6-5-2) – தேவதேவபிரான் - என்பதும், திருவாய்மொழி (2-4-9) - விரைமட்டலர் தண்டுழாய் - என்பதும் ஆகும். (பிதற்ற) - தன் நிலையை மறந்து உரைத்தல் என்பதற்கு ப்ரமாணம், மஹாபாரதம் மோக்ஷதர்மம் – ச்ருதோயமர்த்தோ ராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத: - இந்தக் கருத்தானது ஜமதக்னியின் புத்திரனாகிய பரசுராமனுடைய பிதற்றுதலிலிருந்து கேட்கப்பட்டது - என்பதாகும்.

வ்யாக்யானம் - (கற்புவானிடறி) வானான கற்பை இடறி. ஒருவரால் கடக்கவொண்ணாத மர்யாதையைக் கடந்து. மலை போலேயிருக்கிற மர்யாதையை, காற்கீழே அகப்பட்டதொரு க்ஷுத்ர பாஷாணத்தை இடறுமாபோலே இடறி. பெருவெள்ளமானது சிறுக்கரைகளோடு பெரிய கரைகளோடு வாசியற ஏறுமாபோலே, நாண், மடம், அச்சம் தொடக்கமானவற்றை மதியாதே போகை. (கற்புவானிடறி) "வலிய அறிவை யென்னுதல்; பெரிய ஜ்ஞானத்தை யென்னுதல்" என்றும் சொல்லுவர்கள். அப்போது, கற்பென்று கல்வியாய், அத்தாலே அறிவைச் சொல்லி, வானென்று வலியைச் சொல்லிற்றாகிறது. அன்றிக்கே, கற்பென்று கல்வியாய், அத்தாலே ஜ்ஞாநமாய், வானென்று பெருமையாய், பெரிய ஜ்ஞாநத்தை யென்றுமாம். அபிநிவேசத்துக்கு ஓரளவு உண்டாகிலிறே ஓரளவிலே தடை நிற்பது. "காவலுங் கடந்து" என்னக் கடவதிறே. "யயௌச காசித் ப்ரேமாந்தா"; ஒருத்தி புறப்பட்டுப் போனாள். இவளைக் கொண்டு போனார் ஆர் என்னில்; ப்ரேமத்தாலே வந்த இருட்சி வழி காட்டப் போனாள். "குரவ: கிங்கரிஷ்யந்தி தக்தாநாம்விரஹாக்கிநா"; "குருக்கள் கிடாய்" என்ன; வெந்து விழுகிறதுக்கொரு குடநீர் சொரியவல்லர்களோ?

விளக்கம் – (கற்புவானிடறி) - வலிமையான கற்பு. கற்பிற்கு வலிமை என்ன என்றால் யாராலும் கடக்க இயலாத மரியாதையைப் பெறுதல். மலை போன்றுள்ள மரியாதையை, காலில் கீழே அகப்பட்ட ஒரு சிறு கல்லைத் தள்ளுவது போன்று விலக்கி. கடக்க இயலாத மரியாதையை இவள் மீறியதற்கான உதாரணம் கூறுகிறார். மிகப் பெரிய வெள்ளம் ஒன்று, சிறிய கரை மற்றும் பெரிய கரை

என்பது போன்ற வேறுபாடுகள் இல்லாமல், அனைத்தையும் உடைத்து மேலே ஏறுவது போன்று, இவளும் "நாணம், மடம், அச்சம்" போன்ற பலவற்றையும் மதிக்காமல் சென்றாள். (கற்புவானிடறி) - இதுவரை "கற்பு" என்பதற்கு "மரியாதை" என்பதாகப் பொருள் கொண்டார்; இனி அதற்கு "அறிவு" என்பதாகப் பொருள் கொள்கிறார்; அல்லது, "பெரிய அறிவு என்றும், பெரிய ஞானம் என்றும் கூறலாம்" என்பர். இவ்விதம் கொண்டால், கற்பு என்பது கல்வியாக, அதன் காரணமாக ஞானம் என்பதாக, வான் என்பதைப் பெருமையாகக் கொண்டு, "பெரிய ஞானம்" என்று கூறலாம். அல்லது கற்பு என்று கல்வியாக, இதன் மூலம் அறிவு கூறப்பட்டு, வான் என்று வலியதைக் கூறியதாகவும் உரைக்கலாம். ஆனால் ஒருவர் மரியாதையை மீறுவார்களோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஆசைக்கு ஓர் அளவு ஏற்பட்டால் அல்லவோ, அது ஓர் எல்லையில் தடைப்பட்டு நிற்கும்? இதற்கு இரண்டு நிகழ்வைக் கூறுகிறார்; பெரியாழ்வார் திருமொழி (3-6-1) - காவலுங் கடந்து - என்பது காண்க; அடுத்த உதாரணம் ஸ்ரீவிபு (5-13-19) - யயௌச காசித் ப்ரேமாந்தா - ஒருத்தி புறப்பட்டுச் சென்றாள்; இவளைக் கொண்டு சென்றது யார் என்றால், ப்ரேமத்தால் வந்த யக்ஷி வழி காட்டிச் சென்றாள் - என்பது காண்க. இவள், காவலை எப்படிக் கடந்தாள் என்றால் ஸ்ரீவிபு (5-18-22) - குரவ: கிங்கரிஷ்யந்தி தக்தாநாம்விரஹாக்கிநா - "குருக்கள் கண்டீர்" என்று கேட்க, வெந்து விழுவதற்கு ஒரு குடம் நீர் ஊற்றவல்லரோ – என்பது காண்க.

வ்யாக்யானம் - (சேருமித்யாதி) இங்கே அசல் காக்க இருக்கிறவள் அங்கே தன் வயிறு வளர்க்கப் போவதே! இங்கே பிறர் திருந்தும்படியிருக்கிற இவளங்கே திருந்தினவிடந் தேடிப் போவதே! தன்னைக் கண்டு பிறர் வாழவிருக்கிற இவள், தான் அவனைக் கண்டு வாழப்போவதே! (சேருநல்வளமித்யாதி) ஸத்ருசமான நல்ல ஸம்பத்துச் சேர்ந்திருப்பதாய், நீர்நிலங்களையு முடைத்தாயிருக்கிற திருக்கோளூர்க்கே. (திருக்கோளூர்க்கே போருங்கொல்) போருங்கொல் என்றது புகுங்கொல் என்றபடி. அன்றியே, இவளுக்கு முன்னே தன் நெஞ்சு முற்பட்டபடியாய், அங்கேயிருந்து அவள் வழியில் ஒரு குறைகளின்றியிலே வருமோ? என்கிறாளாகவுமாம். அன்றியே, "நல்வளஞ்சேர் பழனத் திருக்கோளூர்க்கே - சேரும் - கொடி, பூவைகாள்! - போருங்கொல்உரையீர்!" என்னுதல். அதாவது மீண்டு புறப்பட்டு வரவல்லளோ? சொல்லிகோள்!

விளக்கம் – (சேருமித்யாதி) - இங்கு தனக்குரிய ஸம்பத்துக்களைக் காப்பாற்ற வேண்டிய இவள், தனது வயிறு வளர்க்கும்விதமாகத் திருக்கோளூர் சென்றாள். இங்கே இவள் மூலமாக மற்றவர்கள் திருந்தும்படியாக உள்ளபோது, இவள் அங்கே திருந்திய இடம் நோக்கிச் செல்கிறாள். தன்னைக் கண்டு மற்றவர்கள் வாழலாம்படி உள்ள இவள், அங்கு சென்று அவனைக் கண்டு வாழ்வதற்காகச் சென்றாள். (சேருநல்வளமித்யாதி) - ஒப்புமை கூறலாம்படியான நல்ல செல்வ வளங்கள் சேர்ந்துள்ளதாக, நீர் நிலங்களையும் கொண்டதாக உள்ள திருக்கோளூர்க்கே. (திருக்கோளூர்க்கே போருங்கொல்) - "போருங்கொல்" என்பதற்கு மூன்றுவிதமாகப் பொருள் அருளிச்செய்கிறார்; அதாவது "புகுங்கொல், வருங்கொல் மற்றும் மீண்டும் புறப்பட்டு வருவாளோ" என்பதாக மூன்று பொருள் உள்ளது. "போருங்கொல்" என்பது, "அங்கு சென்று சேர்ந்த பின்னர்" என்பதாக முதல் பொருள் தருகிறது. அல்லது, இவளுக்கு முன்பாகவே இவளுடைய நெஞ்சம் முற்பட்டு அங்கு சென்றதால், அங்கிருந்து அவள் வரும் வழியில் எந்தவிதமான குறையும் இன்றி வருவாளோ என்பது இரண்டாவது பொருள் ஆகும். அல்லது "நல்வளஞ்சேர் பழனத் திருக்கோளூர்க்கே - சேரும் - கொடி, பூவைகாள்! - போருங்கொல்உரையீர்!" என்பது மூன்றாவது பொருள் ஆகும்; அதாவது அவள் அங்கிருந்து மீண்டும் புறப்பட்டு வருவாளோ என்று மைனாக்களாகிய நீங்கள் கூறவேண்டும் என்கிறாள் என்று கருத்து.

வ்யாக்யானம் - (கொடியேன்) - இவளைப் பெறுகைக்கு பாக்யம் பண்ணி வைத்து, இவளளவு உங்களைக் கேட்க வேண்டும்படியான பாபத்தைப் பண்ணினேன். (கொடி) உபக்நத்தையொழியில் தறைப்படும். "கோல் தேடியோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மன"மிறே. (கொடியேன் கொடி) பெற்ற என்னையும் விட்டு வேறேயுமோர் அபாச்ரயமுண்டாம்படியான பாபத்தைப் பண்ணினேன். பெற்ற தாயாரை விட்டகலுகை குடி ஸ்வபாவம்போலே காணும். (பூவைகாள் போருங்கொல் உரையீர்) பெற்ற தாயாரை விடலாம்; அத்தனையல்லது, பிறந்தாரைக் கைவிடப் போகாதென்றிருக்கிறாள் காணும் தன்னையிட்டு. போக்குவரத்து எனக்கன்றோ சொல்லலாகாது, உங்களுக்கு ஒதுக்காதே சொல்லுமே. வயிற்றிற் பிறந்தாரை ஒளிப்பாரில்லையே.

விளக்கம் – (கொடியேன்) – இவளைப் பெறுவதற்கு மிக்க புண்ணியம் செய்த நான், இவள் நிலை குறித்து உங்களிடம் கேட்கும்படியான பாபத்தையும்

செய்துள்ளேன். (கொடி) - கொள் கொம்பு இல்லையென்றால் தரையில் விழும்படி உள்ள நிலை; இதற்கு ப்ரமாணம், இரண்டாம் திருவந்தாதி (27) - கோல் தேடியோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மனம் – என்பதாகும். (கொடியேன் கொடி) - பெற்ற தாயான என்னை விடுத்து வேறு ஒரு பற்றுக்கோல் ஏற்படும்படியான பாபத்தை நான் செய்துள்ளேள். பெற்ற தாய்க்கும் கூடக் கூறாமல் செல்வாளோ என்பதற்கு விடை அளிக்கிறார்; பெற்ற தாயாரை விட்டு அகலுதல் என்பது இந்தக் குலத்தின் தன்மை போலும். (பூவைகாள் போருங்கொல் உரையீர்) – பெற்ற தாயாரை விடலாம்; பிறந்தாரைக் கைவிடக் கூடாது என்று இந்தத் தாயார் உள்ளாள். இவள் எங்கு செல்கிறாள் என்பதை எனக்குக் கூறாமல் இருக்கலாம், ஆனால் உங்களை ஒதுக்காமல் இவள் கூறியிருப்பாள் அல்லவோ? வயிற்றில் பிறந்தவர்களுக்கு ஒளிப்பவர்கள் இல்லை.

வ்யாக்யானம் - (உரையீர்) அவள் சொல்லிப் போகச்செய்தே இவை சொல்லாதிருக்கிறன என்றிருக்கிறாள். (போருங்கொல்) என்கிற ஸம்யத்துக்கடி, பாவியான நான் இருக்கையாலே மீளாதொழியவுங் கூடுமே, நீங்களிருக்கையாலே மீளவுங்கூடுமிறே; என் பாபமே ப்ரபலமாய் வாராதொழியுமோ? உங்களைப் பார்த்து வருமோ? சொல்லிகோள்! அறிவித்துப் போனாளாகில் ராமாவதாரத்திற்போலே லோகமாகப் பின் தொடருமிறே; “சுற்றமெல்லாம் பின்றொடர” இறே போயிற்று!

விளக்கம் – (உரையீர்) - இவள் அவற்றிடம் கூறிய பின்னரே சென்றிருப்பாள்; இவை தன்னிடம் கூறாமல் உள்ளன என்று எண்ணுகிறாள். (போருங்கொல்) - இந்த ஐயத்திற்கு அடிப்படைக்காரணம் என்ன என்பதை கூறுகிறார். பாபம் செய்த நான் இங்குள்ளதால், அவள் இங்கு மீண்டும் திரும்பாமல் இருக்கக்கூடும்; ஆனால் மைனாக்களாகிய நீங்கள் இங்கு உள்ளதால், மீண்டும் திரும்புவாள். எனது பாபமானது மிகுதியாக இருப்பதால், வராமல் இருப்பாளோ? உங்களைப் பார்த்து வந்துவிடுவாளோ? நீங்களே கூறவேண்டும். சரி, இவளுடைய மகள் இவளிடம் கூறாமல் ஏன் புறப்பட்டு சென்றாள் என்பதற்கு விடை அளிக்கிறார். முன்பே கூறி விட்டுச் சென்றால், இராமாவதாரம் போன்று, உலகம் முழுவதும் பின்னே வரும் நிலை உண்டாகும். பெருமாள் திருமொழி (8-6) - சுற்றமெல்லாம் பின்றொடர - என்று அல்லவோ இராமன் சென்றான்?

6-7-3. பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம் புட்டில்கள்
யாவையும் திருமால் திருநாமங்களே கூவி எழும் என்
பாவை போய் இனித் தண் பழனத் திருக்கோளூர்க்கே
கோவை வாய் துடிப்ப மழைக் கண்ணொடு என் செய்யும்கொலோ

பொருள் – விளையாட்டிற்கு உதவும் மைனாக்கள், பசுமையான கிளிகள், பந்து, தூதை (சிறுசோறு சமைக்கும் பானைச்சட்டி), பூக்களை வைக்கும் கூடைகள் போன்ற பலவற்றாலும் உண்டாகவல்ல இனிமையும் இன்பமும், அவனுடைய திருநாமங்களைக் கூறுவதால் மட்டுமே ஏற்படும்படியாக உச்சரித்து, அதன் மூலம் மட்டுமே உயிர் தாங்கும்படியாக உள்ள எனது பெண்பிள்ளையானவள், இந்தத் திருநாமங்களைக் கூறும் இன்பங்கள் அனைத்தும் இங்கு உள்ளபோதிலும், குளிர்ந்த வயல்களைக் கொண்ட திருக்கோளூர்க்குச் செல்கிறாள்; அங்கு அவன் இவள் முன்பாக வந்து, வரவேற்பு கூறி, அணைத்துக் கொள்வது போன்றவற்றைச் செய்யாமல் உள்ளதால், கோவைப்பழம் போன்றுள்ள தனது உதடுகள் துடிக்கும்படியாகவும், மழை பொழிவது போன்று கண்ணீர் நிறைந்துள்ள கண்களுடன் கூடியவனாகவும் நின்று, அங்கு என்ன செய்கிறாளோ?

அவதாரிகை – "திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடை குலைப்படக் கடவள்", என்கிறாள்.

விளக்கம் – திருக்கோளூர் சென்று சேர்ந்தால் இவள் எவ்விதம் நிலைகுலைந்து தளர்வாள் என்று கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (பூவையித்யாதி) வேறொன்றைக் கொண்டு போதுபோக்கவேண்டும் பருவத்திலும் திருநாமத்தையே கொண்டு ஜீவித்திருக்குமவள்கிடீர் போனாள்! இங்கிருந்த நாள் மற்றொன்று தாரகமாய், அங்கே போய் அவனாலே தரிக்கப் போனாளோ? பூவை தொடக்கமான லீலோபகரணங்களால் பிறக்கும் ஹர்ஷமெல்லாம் த்வயத்திற்படியே ஸ்ரீய:பதியென்கிற திருநாமத்தைச் சொல்லி அத்தாலேயுண்டாகாநின்றது. "'ஊரும் நாடுமுலகமுந் தன்னைப் போல்' என்கிறபடியே, இவைதாம் திருநாமத்தைச் சொல்லிற் றானாலாகாதோ" என்று பெற்றி நம்பிள்ளையைக் கேட்க, "அதுக்கு வ்யபிசாரமுண்டு, 'பந்து தூதை' என்கிறவிடத்தே தட்டுப் பிறக்கும்" என்ன;

"அங்ஙனேயிறே" என்று இசைந்து போனார். அவன் திருநாமங்களை இவற்றுக்கிட்டு அழைத்ததானாலோ? என்னில்; "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாங் கண்ணன்" என்றிருக்கிற அதிமாத்ர ப்ராவண்யத்துக்கு இது சேராது.

விளக்கம் – (பூவை இத்யாதி) - வேறு எதனையும் வைத்துக்கொண்டு தனது பொழுதைக் கழிக்க வேண்டிய வயதில் இவள் உள்ளபோதிலும், அவனுடைய திருநாமங்களைக் கொண்டு மட்டுமே உயிர் பிழைக்கிறாள். இங்கு இருந்த நாட்களில் வேறு எதனையோ வைத்து உயிர் பிழைத்தவள், அங்கு சென்று அவனால் தரிக்கப் போகிறாளோ? மைனாக்கள் தொடக்காக உள்ள விளையாட்டுப் பொருள்களால் கிடைக்கவல்ல மகிழ்ச்சி அனைத்தும், த்வயமந்திரத்தின்படி, மஹாலக்ஷ்மியின் நாதன் என்கிற திருநாமத்தைக் கூறி, அதன் மூலம் ஏற்படுகிறது. பெற்றி என்பவர் நம்பிள்ளையிடம், "கடந்த பாசுரத்தில், 'ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்' என்று கூறியதற்கு ஏற்ப, பூவைகள், கிளிகள், தூதை போன்ற அனைத்தும், ஆழ்வார் போன்றே அவனுடைய திருநாமத்தைக் கூறும்படிச் செய்தார் என்று கூறலாம் அல்லவோ?", என்றார். அதற்கு நம்பிள்ளை, "அவ்விதம் கூறுவதில் தோஷம் உண்டு. பூவை போன்றவை சேதநங்கள் என்பதால், அவ்விதம் கூறுதல் பொருந்தும்; ஆனால் பந்து, தூதை, புட்டில் போன்றவை அசேதநங்கள் என்பதால் பொருந்தாது", என்றார். இதற்குப் பெற்றியும், "அப்படியா" என்று ஒப்புக் கொண்டு சென்றார். சரி, அவனுடைய திருநாமங்களை இவற்றுக்கு வைத்து, அந்தப் பெயர்க்ளைக் கூறி இவற்றை அழைத்ததாகக் கொள்ளலாம் அல்லவோ என்றால், "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாங் கண்ணன்" என்பதாக உள்ள, அளவு கடந்த ஈடுபாட்டிற்கு, வேறு எதிலும் பொழுதைக் கழித்தல் என்பது ஈடாகாது.

வ்யாக்யானம் - (பூவையித்யாதி) திருநாமச் சுவடறிந்த பின்பு லீலோபகரண தர்சநம் இவளுக்கு அஸஹ்யமாயிருக்கும், ஸ்ரீபரதாழ்வானுடைய ராஜ்யதர்சநம் அவனுக்கு அஸஹ்யமானாப்போலே. சக்ரவர்த்திக்கு சாஸ்த்ரார்த்தங்கள் பண்ணின அன்று நாயிறுபாடு, "கைகேயி பண்ணின கச்மலத்துக்கு நாமும் கீழோலை யிட்டோமென்று நாட்டார் நினைத்திருப்பதொன்றுண்டு; அத்தோஷம் நமக்கில்லை என்றறிவிக்க வேணும்" என்று புக்கான். ராஜலோகமடங்கலும் திரண்டு

“கர்த்தாவானவனை இழந்தோம்; அநந்தரம் ப்ராப்தரானவர் காடேறப் போய்க்கொடு நின்றார்; இனி ராஜபுத்ரர்களில் நின்றாரைக் கொண்டு நிர்வஹிக்குமத்தனையிறே” என்று பார்த்து, மங்களாவஹமான தூர்ய கோஷங்களையும் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இத்த்வநி செவிப்பட்டபோது “கருமாணிக்கமலையில் பிராட்டி ஸ்வயம்வரத்துக்கு மணமுரசு அறைந்தபோது, தோழி பட்டதெல்லாம் பட்டான்.

விளக்கம் – (பூவையித்யாதி) - அல்லது “பூவை …எழும்” என்பதற்கு, திருநாமத்தின் சுவையை அறிந்த பின்னர், விளையாட்டுப் பொருள்களைப் பார்த்தல் என்பது இவளுக்கு பொறுத்துக் கொள்ள இயலாதபடி இருக்கும்; அதாவது “அவை அனைத்தையும் இகழும் என் பாவை” என்று கருத்து; இங்குள்ள “எழும்” என்பதற்கு, அவற்றை அகற்றி எழுவாள் என்பது பொருள். இந்த இடத்தில் இராமாயண நிகழ்வு ஒன்றை உதாரணம் காண்பிக்கிறார். ஸ்ரீபரதாழ்வானுடைய ராஜ்யதரிசனம் என்பது அவனுக்கே பொறுக்க இயலாதது போன்று ஆகும் என்கிறார். இராமனுடைய பட்டாபிஷேகத்திற்குக் குறிக்கப்பட்டிருந்த சிற்றஞ்சிறுகாலையில், “கையி செய்த குற்றங்களுக்கு நாமும் இசைந்தோம் என்று நாட்டில் உள்ளவர்கள் நினைக்க வாய்ப்புள்ளது. ஆனால் அந்தத் தோஷம் நமக்கு இல்லை என்று மக்களுக்கு அறிவிக்கவேண்டும்”, என்று தீர்மானித்த பரதன், அரச சபையை அடைந்தான். அப்போது அங்கிருந்த அனைத்து அரசர்களும், “நாம் தசரதனை இழந்தோம். அடுத்து, இந்த நாட்டிற்கு ஏற்றவனாகிய இராமனும் கானகம் சென்றான். இனி, அரசபுத்திரர்களில் யார் உள்ளனரோ அவர்களைக் கொண்டு நாட்டை நிர்வாகம் செய்வதே இயலும்”, என்று எண்ணியபடி, மங்களத்தை அளிக்கும் பலவற்றையும் முழங்கியபடி இருந்தனர். இந்த ஓசையைக் கேட்டவுடன் “கருமாணிக்க மலை” என்ற திருவாய்மொழியில், பிராட்டியின் ஸ்வயம்வரத்திற்காக மங்களவாத்யம் முழங்கும்போது தோழி அடைந்த நிலையைப் பரதன் அடைந்தான்.

வ்யாக்யானம் – (விலலாப ஸபா மத்யே) தனியிடத்திலன்றோ பறி கொடுப்பது. தனக்கு சேஷத்வமிறே ஸ்வரூபம்; ஸ்வரூபத்தையிறே அபஹரிக்க நினைக்கிறது! (ஜகர்ஹேச) ஸந்த்யாவந்தநத்துக்குப் பிற்பட்டாரை சிஷ்டகர்ஹை பண்ணுமாபோலே. (புரோஹிதம்) இக்குடிக்கு நாங்கள் கைவாங்கியிருக்க, நீ முன்னோடிக் காரியங்கள் நடத்தக் கடவதாகச் சமைந்தபடி சாலவழகிதாயிருந்தது. (ஸபா மத்யே ஜகர்ஹே) “நியமாதி க்ரமம் ரஹஸி போதயேத்” என்கிற நிலையைக்

குலைத்தான்; ஹேது கழிகையினாலே. (ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய) சேஷ வஸ்துக்களிலே ஒன்றையொன்று ஆளுமோ? அங்ஙனேயாமன்று; ராஜ்யந்தானெனக்கக் கடவதானாலோ? (தர்மம் வக்துமிஹார்ஹஸி) லோகத்திலே தமப்பன்மாரையும் தமையன்மாரையும் அழியச் செய்து தாந்தாம் ராஜ்யத்தைக் கைக்கொண்டு போருவதொன்றுண்டு; “அது இந்த வ்யக்தியிலும் செய்யும்” என்றிராதே கொள்ளாய்; என் ப்ரக்ருதியறிந்து அதுக்கீடாக வார்த்தை சொல்லப் பாராய். (கதம் தசரதாஜ்ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக:) அவர் பிரிந்த அநந்தரம் முடியவல்லவன் வயிற்றிலே பிறந்தேனாம்படி எங்ஙனே? அவர் பொகட்டுப்போன ராஜ்யத்தை நான் அபஹரித்தால். (நமஸ்யாமி க்ருதாஞ்ஜலி) அப்ராப்தம் அவன் சொல்லச் செவி தாழ்த்ததுக்கு அபவாத ப்ராயச்சித்தம் பண்ணுகிறான்.

விளக்கம் – இங்கு, அயோத்யாகாண்டம் (82-10) - ஸ பாஷ்ப கலயா வாசா கலஹம்ஸ ஸ்வர | யுவா விலலாப ஸபா மத்யே ஜகர்ஹே ச புரோஹிதம் - வாலிபனான பரதன், அன்னத்தின் இனிய நாதம் போன்ற குரலில், துக்கம் தாங்காமல், கண்ணீருடன் தழுதழுத்த சொற்கள் கொண்டு அந்த அரசவையில் புரோஹிதரைக் கடித்து கொண்டான் - என்றும், அயோத்யாகாண்டம் - (82-12) - கதம் தசரதாஜ்ஞாத: பவேத் ராஜ்யாபஹாரக: । ராஜ்யம் சாஹம் ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹார்ஹஸி - தசரதருடைய புத்திரன், மூத்தவனுக்கு உரிய இந்த நாட்டை கைப்பற்றும் ஒருவனாக எப்படி ஆவான்? இந்த நாடும் நானும் இராமனுடைய உடைமைகள் ஆவோம். இதனை மனதிற்கொண்டு தர்மத்தைக் கூறுங்கள் - என்றும் உள்ள ச்லோகங்களை வ்யாக்யானம் செய்கிறார். (விலலாப ஸபா மத்யே) - தனி இடத்தில் அல்லவோ பறி கொடுப்பது. அடிமைத்தனம் என்பதோ தனக்கு ஸ்வரூபம்; அத்தகைய ஸ்வரூபத்தை அல்லவோ என் தாயான கைகேயீ அபகரிக்க எண்ணுகிறாள். (ஜகர்ஹேச) – ஸந்த்யாவந்தனத்தைக் காலதாமதம் செய்பவர்களைப் பெரியோர்கள் பழித்துக் கூறுவது போன்று. (புரோஹிதம்) - இந்த வம்சத்திற்கு ஏற்றபடி நாங்கள் அடுத்து என்ன செய்வது என்று நிற்கும்போது, புரோஹிதரான நீவீர் முன்னின்று எனது பட்டாபிஷேகத்தை நடத்த முயல்வது மிகவும் நன்றாக உள்ளது! (ஸபா மத்யே ஜகர்ஹே) - அதாவது ஆபஸ்தம்பத்தில் “நியமாதி க்ரமம் ரஹஸி போதயேத் - தவறான செயல்களைத் தனிமையில் தெரிவிக்கவேண்டும் - என்ற ந்யாயத்தை பரதன் கைவிட்டான். காரணம், புரோஹிதத்தன்மை என்ற, “செய்யவேண்டிய செயல்” என்பதை

கைவிட்டமையால் ஆகும். (ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய) - அசேதனமாக உள்ள ராஜ்யத்தையும், தன்னையும் இராமனுடைய அடிமையாகக் கொண்டு, அடிமைத்தனத்தை கொண்ட வஸ்துக்கள் ஒன்றை ஒன்று ஆட்சி செய்யுமா? அப்படியே அவை ஒன்றை ஒன்று நியமிக்கும்படி இருந்தாலும், ராஜ்யம் என்னை ஆளலாம்படி இருக்கலாம் அல்லவோ? (தர்மம் வக்துமிஹார்ஹஸி) - இந்த லோகத்தில் தந்தையையும் உடன் பிறந்த சகோதரனையும் அழியச்செய்து, தான் ராஜ்ஜியத்தைக் கைக்கொண்டு செல்வது உண்டு; இவனும் அது போன்று செய்வான் என்று என்னைப் பார்த்து முடிவு கட்டவேண்டாம். எனது தன்மையை அறிந்து, அதற்கு ஏற்றபடி தர்மம் நிறைந்த சொற்களைக் கூறுவீராக. (கதம் தசரதாஜ்ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக:) - அவர் சென்ற பின்னர், நான் ராஜ்யத்தை அபகரித்தால், அவர் பிரிந்து சென்ற உடனேயே தளர்ந்து போகவல்ல வயிற்றில் நான் பிறந்தேன் என்று எப்படிக் கூறமுடியும்? இதனைக் கேட்ட அரச புரோஹிதர், "நீவிர் நம்மை இப்படிக் கடிந்து கொள்வது ஏன்? உம்முடைய தாயார் உமக்கு ராஜ்யத்தை பெற்றுக் கொண்டு இராமனை கானகத்திற்கு அனுப்பினார். இதில் நான் என்ன செய்ய உள்ளது?", என்கிறார். இதற்கு பரதன் விடை கூறுகிறான்; அயோத்யாகாண்டம் (82-15) - யத்தி மாத்ரா க்ருதம் பாபம் நாஹம் ததபிரோசயே । இஹஸ்தோ வநதுர்கஸ்தம் நமஸ்யாமி க்ருதாஞ்ஜலி: - எனது தாயாரால் செய்யப்பட்ட பாபத்தில் எனக்கு விருப்பம் இல்லை. ஆகவே அதற்குப் பரிகாரமாக நான் இங்கிருந்தபடியே அடர்ந்த கானகத்தில் உள்ள இராமனுக்கு நமஸ்காரம் செய்கிறேன் – என்றது காண்க. அதாவது, தகுதி அற்ற சொற்களைப் புரோஹிதர்கள் கூறியதால், அவற்றைக் கேட்ட காரணத்திற்காக பரதன், தான் ப்ராயச்சித்தம் செய்கிறான் என்று கருத்து.

வ்யாக்யானம் - (என் பாவை போயினி) என் புத்த்யதீநமான வ்யாபாரத்தையுடையவள் கிடீர் என்னையொழியப் புறப்பட்டுப் போனாள். நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தை யுடையவளென்றுமாம். (இனி – போய்) லீலோபகரணங்களாற் கொள்ளும் கார்யமும் அவனேயாம்படியான இந்த ப்ராவண்யத்துக்கு மேலே அங்குப் போய்ப் பெறுவது என்னாகப் போனாளோ? (தண் பழனத் திருக்கோளூர்க்கே) ச்ரமஹரமான நீர் நிலங்களையுடைய திருக்கோளூர்க்கே.

விளக்கம் – (என் பாவை போயினி) – "பாவை" என்பதற்கு "மரப்பொம்மை" என்பதாகப் பொருள் கொண்டு, அதனைப் போன்று "எனது பெண்பிள்ளை தாயாகிய எனக்கு வசப்பட்டவள்", என்ற கருத்தில் அருளிச்செய்கிறார். எனது புத்திக்கு ஏற்றபடியான செயல்களைச் செய்பவள், என்னை விட்டு அகன்று சென்றாள். அல்லது "பாவை" என்பதற்கு பெண்மைத்தன்மை என்பதாகப் பொருள் கொண்டு, தன்னை அடையாளம் காண்பிப்பதாக உள்ள பெண்மைத்தன்மையைக் கொண்டவள் என்றும் கூறலாம். (இனி … போய்) - தனது விளையாட்டுப் பொருள்களால் நான் அடையும் பொழுதுபோக்குகளும் அவனே என்றாகும்படியாக, இந்த ஈடுபாட்டுடன் இங்கு நின்றுவிடாமல் அதனையும் மீறி அங்கு சென்று அவற்றை அடைவது என எண்ணிச் சென்றாளோ? (தண் பழனத் திருக்கோளூர்க்கே) - காண்பவர்களுடைய களைப்பைப் போக்கவல்ல நீர் நிலங்கள் கொண்ட திருக்கோளூர்க்குச் சென்றாள்.

வ்யாக்யானம் - (கோவை வாய் துடிப்ப) கோவைப்பழம் போன்ற சிவப்பையுடைத்தான அதரமானது ஸ்ப்புரிக்க. "பிரியேன்" என்று பிரிந்தாய்; "வருகிறேன்", என்று வந்திலை; "என்னைத் தனியேயிட்டு வைத்தாய்; நான் வருமளவும் இருந்தாய்" என்றாற் போலேயிருக்கச் சில சொல்ல நினைக்குமே; அது தோற்றும்படி உதடு நெளிக்கிறபடி. (கோவை வாய் துடிப்ப மழைக்கண்ணொடு) நினைத்தது சொல்லித் தலைக்கட்ட வொட்டாநின்றதோ கண்ணநீர்! உடைகுலைப்பட்டுக் கண்ணநீராலே தலைக்கட்டாநின்றாள். "உக்த்வார்யேதி ஸக்ருத்தீநம் புநர்நோவாச கிஞ்சந" என்னும்படியே.

விளக்கம் – (கோவை வாய் துடிப்ப) - கோவைப்பழம் போன்றுள்ள உதடுகள் துடிதுடித்தபடி. இது துடிப்பதன் காரணங்களைக் கூறுகிறார்; "பிரியேன்" என்று கூறி, பிரிந்தாய்; "வருகிறேன்" என்று கூறி, வராமல் விடுத்தாய்; என்னைத் தனியாக இருக்கும்படி செய்தாய்; நான் வரும்வரை இருந்து, பின்னர் சென்றுவிட்டாய். இப்படியாகப் பலவற்றையும் கூற எண்ணுதால், உதடுகள் துடித்தபடி உள்ளன. (கோவை வாய் துடிப்ப மழைக்கண்ணொடு) – சரி, அவற்றைக் கூறாமல் உதடுகள் துடித்தபடி உள்ளது ஏன்? நினைத்து வந்ததைக் கூறி முடிக்க இயலாமல் கண்ணீர் நின்றதோ? உள்ளம் தளர்ந்து, கண்ணீரால் முடிந்து நின்றாள்; அதாவது அவன் முன்பாக வந்து நின்றவுடன், இவ்விதம் உருக்குலைந்தாள். இவள் ஏதும் கூறாமல் நின்றதற்கு ப்ரமாணம் அயோத்யாகாண்டம் (99-30) –

உக்த்வார்யேதி ஸக்ருக்த்தீநம் புநர்நோவாச கிஞ்சந - அரசனே என்று கூறிய பின்னர், பரதன் வேறு எதனையும் கூறவில்லை – என்பதாகும்.

வ்யாக்யானம் - (என் செய்யுங்கொலோ) சொல்லமாட்டாள், தவிரமாட்டாள், அழாதொழிய மாட்டாள்; எங்ஙனே படுகிறாளோ? நம்மையும் பிறரையும் விட்டு அவன் திருநாமங்களை அநுபவிக்கிறபோதை அழகு காணப்பெற்றோம்! அவன் தன்னையே கண்டநுபவிக்கிறபோதை அழகு காணப் பெற்றிலோமே. அநுஸந்தாந வேளையிற் போலன்றிறே கண்டால் பிறக்கும் விகாரங்கள்; “காமனுடல் கொண்ட தவத்தாற்குமையுணர்த்த வண்டலம்பும் தாரலங்கல் நீண்முடியான் தன் பெயரே கேட்டிருந்தங்காரலங்கலானமையால் – கண்டு வணங்கினார்க் கென்னாங்கொல்” என்றிறேயிருப்பது. அலாபத்தோடேயிருக்கும் இருப்புக் கண்டேன், லாபத்தோடேயிருக்கும் இருப்புக் காணப்பெற்றிலேன் என்கிறாள்.

விளக்கம் – (என் செய்யுங்கொலோ) - வெளியிலும் கூறமாட்டாள், தவிர்க்கவும் மாட்டாள், அழவும் மாட்டாள், என்ன பாடுபடுகிறாளோ? நம்மையும் மற்றவர்களையும் விடுத்து அவனுடைய திருநாமங்களை அவள் அனுபவிக்கும்போது உள்ள அழகை நாம் காணப்பெற்றோம்; ஆனால் அவள் அவனையே நேரடியாகக் காணும்போது அடையும் அனுபவத்தை நாம் காணப்பெறவில்லை. எண்ணியபடி இருத்தல் போன்ற அனுபவம் அல்லவே நேரடியாகக் காணுபோது பிறக்கும் அனுபவமும் மாற்றங்களும்! இதற்கு நான்முகன் திருவந்தாதி (78) - காமனுடல் கொண்ட தவத்தாற்குமையுணர்த்த வண்டலம்பும் தாரலங்கல் நீண்முடியான் தன் பெயரே கேட்டிருந்தங்காரலங்கலானமையால் – கண்டு வணங்கினார்க் கென்னாங்கொல் – என்பது காண்க. “இவள் அவனைப் பெறாமல் இருந்தபோது எவ்விதம் இருந்தாள் என்பதை நான் கண்டேன்; ஆனால் அவனைப் பெற்றபோது அடைந்த நிலையை என்னால் காண இயலவில்லை”, என்கிறான்.

6-7-4. கொல்லை என்பர் கொலோ குணம் மிக்கனள் என்பர் கொலோ
சில்லை வாய்ப் பெண்டுகள் அயல் சேரி உள்ளாரும் எல்லே
செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே
மேல் இடை நுடங்க இளமான் செல்ல மேவினளே

பொருள் – எல்லையற்ற ஐச்வர்யம் நிறைந்தவனாக அவன் திருக்கண்கள் வளர்ந்தருளும் திருக்கோளூருக்கு, தனது மெல்லிய இடையானது அசையும்படியாக, இளமான் போன்ற எனது இந்தப் பெண்பிள்ளை, தனது பழியையும் வயதையும் ஆராயாமல், தனது நெஞ்சம் பொருந்திச் சென்றாள். பலவற்றையும்பேசுவதையே தங்கள் இயல்பாகக் கொண்ட வாயை உடையவர்களாகிய இந்த ஊர்ப்பெண்கள் மற்றும் அயல் ஊரில் உள்ள பெண்கள் ஆகிய பலரும், "இவள் தனது எல்லையை மீறுகிறாள்" என்று கூறுகிறாளோ? அல்லது, "மிகவும் அற்புதமான விஷயத்தை அறிந்தவளாக, மேன்மையான குணங்கள் கொண்டவள்", என்று கொண்டவர்களோ?" எனது தோழியே! கூறுவாயாக.

அவதாரிகை – "இவளைக் கண்ட நாட்டார், குணஹீநையென்பர்களோ? குணாதிகையென்று கொண்டாடுவர்களோ?", என்கிறாள்.

விளக்கம் – "இவளைக் கண்டவுடன் ஊரில் உள்ளவர்கள், 'இவள் குணம் அற்றவள்' என்று கூறுவார்களோ அல்லது 'குணம் மேம்பட்டவள்' என்று கொண்டாடுவார்களோ", என்கிறாள்.

வ்யாக்யானம் - (கொல்லையென்பர்கொலோ) "இவள் வாசல் கடந்து புறப்படக் கடவதல்லாத மர்யாதையைக் குலைத்தாள்; இவள் நிஷித்தாநுஷ்ட்டாநம் பண்ணினாள்; இவள் வரம்பழிந்த செயல்களைச் செய்தாள்", என்பர்களோ? கொல்லையென்று வரம்பில்லாதததுக்குப் பேர். (குணம் மிக்கனளென்பர்கொலோ) குணாதிக விஷயத்துக்குப் போரும்படி செய்தாளென்பர்களோ?

விளக்கம் – (கொல்லையென்பர்கொலோ) - "கொல்லை" என்பதற்கு, "வரம்பு மீறிச் செயல்களைச் செய்பவள்" என்பதாகப் பொருள் கொண்டு, அதனை இன்னது என்று விரிவாக அருளிச்செய்கிறார்; "வரம்பு அழிந்த செயல்" என்பது வாசல்

கடந்து புறப்படுதல் மற்றும் தவிர்க்கப்பட்ட செயலைச் செய்தல் என்பதாகும். “இவள் வாசல் கடந்து புறப்படக் கடவது என்பதைச் செய்து, மரியாதையைக் குலைத்தாள்; இவள் தவிர்க்கப்பட்ட செயலைச் செய்தாள்; இவள் வரம்பு மிறிய செயலைச் செய்தாள்”, என்று பலரும் கூறுவார்களோ? கொல்லை என்பதற்கு “வரம்பு மீறிய செயல்” ஆகும். (குணம் மிக்கனளென்பர்கொலோ) – ஆனால், மரியாதைக்கு பங்கம் ஏற்படுத்தியவளை “குணம் மிக்கவள்” என்று கூறுவார்களோ என்பதற்கு விடை அளிக்கிறார். தனது குணத்திற்கு ஏற்றபடி, அதிகமான குணங்கள் கொண்ட விஷயத்திற்கு ஏற்றபடி செய்தாள்; அதாவது குணங்கள் மிக்க அந்த விஷயத்திற்கு ஏற்றபடி ஈடுபாடு கொண்டாள்.

வ்யாக்யானம் - (கொல்லையென்பர்கொலோ குணம் மிக்கனளென்பர்கொலோ) இவள் வித்யதிக்ரமம் பண்ணினாள் என்பர்களோ; அன்றிக்கே ஸித்தாந்தந் தன்னையே சொல்லுவர்களோ?

விளக்கம் - (கொல்லையென்பர்கொலோ குணம் மிக்கனளென்பர்கொலோ) – “இவள் விதியை மீறினாள்”, என்று கூறுவார்களோ? அதாவது, அவனை மட்டுமே உபாயம் என்று கொள்ள வேண்டியதாக உள்ளபோது, இவள் தனது சொந்த முயற்சி மூலம் அவனை அடைய முயற்சித்தல் என்பது, மற்ற உபாயங்களைத் தள்ளும்படியாக கூறும் “பரித்யஜ்ய” என்பதாக உள்ள விதியை மீறுவதாகிறது. அல்லது ஸித்தாந்தத்தைக் கூறுவார்களோ? இங்கு ஸித்தாந்தம் என்பது “ருசியின் இயல்பு, அடைய முயலும் விஷயத்தின் இயல்பு, ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்த்தல்” என்பதாக உள்ள இவளின், “ஈடுபாட்டின் மிகுதி, விஷயத்தின் மேன்மை, அடிமைத்தனம்” என்பதான மூன்றாலும், இவள் அந்த நிலையை அடையக்கடவள் என்பதே ஸித்தாந்தம் ஆகிறது.

வ்யாக்யானம் - ஓரளவிலே நின்று நிஷேதித்தவற்றைக் கொண்டு, இது அப்ராப்தம் என்பர்களோ; ருசி ஸ்வபாவத்தாலும் விஷய ஸ்வபாவத்தாலும் இது ப்ராப்தமென்பர்களோ? ஸாதந விதியளவிலே நின்று தடுமாறுவர்களோ; ஸ்வஸ்வரூபத்தைப் பார்த்துத் தெளிவர்களோ? உபாயாம்சத்தைப் பற்றி நின்று, இது கடவதல்ல என்பர்களோ; ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையும் ப்ராப்ய

ஸ்வரூபத்தையும் பார்த்து, இது கடவதென்பர்களோ? அந்ய நிஷேத பூர்வகமான ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்தால், புறப்பட ப்ராப்தியில்லை; ஸ்வரூபாநுரூமான ப்ராப்யாநுஸந்தாநம் பண்ணினால், போய்ப் புக்கல்லது நிற்கவொண்ணாது. விதியைப் பார்த்து கர்ஷிப்பர்களோ; காமவசநத்தைப் பார்த்து நன்றென்பர்களோ? (நகாமதந்த்ரேதவ புத்திரஸ்தி) "விரக்தரான நீர் காம பரவசரான எங்களை என்படுத்துகிறீர்?" என்றாளிறே தாரை, இளையபெருமாளை.

விளக்கம் – ஆனால், அவன் உள்ள இடம் தேடியபடி செல்லுதல் என்பது "விதியை மீறுதல் மற்றும் ஸித்தாந்தம் என்று கூறுதல்", என்பதாக எப்படி ஆகும்? இதற்கு விடை அருளிச்செய்கிறார். இவனையே உபாயமாகக் கொள்ளுதல் மற்றும் அவனால் ரக்ஷிக்கப்படும் பொருள் என்ற ஒரு நிலையில் நிற்காமல் இவள் விலக்கினாள் என்பதைக் கொண்டு, "இது தகுதி அற்ற செயல்" என்பார்களோ? அல்லது இவளுக்கு அந்த விஷயத்தின் மீது ஏற்பட்ட மிகுந்த ஆசை மற்றும் அந்த விஷயத்தின் இயல்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்பவர்களாக, "இது தகுந்த செயலே ஆகும்", என்பார்களோ? மேலே கூறப்பட்ட விதிகளை ஆராந்தவர்களாக நின்று, முடிவு செய்வதில் தடுமாறுவார்களோ? அடிமைத்தனம் என்பது எஜமானனுக்கு மேன்மையை உண்டாக்கவல்லது என்பதால், ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்த்து தெளிவடைவார்களோ? இந்த இரண்டையும் எண்ணிப் பார்த்து, "இது சரியான செயல் அல்ல", என்று தீர்மானிப்பார்களோ? ஆத்மாவின் ஸ்வரூபம் மற்றும் அடையும் பேற்றின் ஸ்வரூபம் ஆகியவற்றைப் பார்த்து, "இந்தச் செயல் சரியானதே ஆகும்", என்பார்களோ? ஆத்மாவின் ஸ்வரூபம் மற்றும் உபாயங்களைக் கைக்கொண்டு நிற்காமல், அவற்றின் விலக்குதலை முன்னிட்டு, ஆத்ம ஸ்வரூப ஞானம் ஏற்பட்டால், இவள் புறப்படுவதற்கு தகுதி கொண்டவள் அல்லள்; ஸ்வரூபத்திற்குத் தகுதியான கைங்கர்யத்தை எண்ணியபடி இருத்தல் மற்றும் அங்கு சேருதல் என்பது இல்லாமல் இங்கு நிற்க இயலாது. விதிகளைப் பார்த்து நிந்திப்பார்களோ அல்லது காமசாஸ்த்ரத்தை எண்ணி "நல்லது" என்பார்களோ? ஆனால் காமசாஸ்த்ரத்தை ஆராய்ந்தால், இவள் செய்த செயல் நல்லதே ஆகும் என்று தோன்றுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; கிஷ்கிந்தாகாண்டம் (33-55) - நகாமதந்த்ரேதவ புத்திரஸ்தி - தாரை லக்ஷ்மணனிடம் "வீரக்தரான நீவிர், காமத்திற்கு வசப்பட்டுள்ள எங்களை ஏன் வாட்டுகிறீர்?", என்பது காண்க.

வ்யாக்யானம் - (சில்லை வாய்ப்பெண்டுகள்) சிலுகுசிலுகு என்னும் ஸ்த்ரீகள். விஷயாதீநமாய் வருமத்தையும் வசநசித்தம் என்றிருக்குமவர்கள். உபாய புத்த்யா வருமவற்றிலிறே விதிக்கு விஷயமுள்ளது; குண ப்ரேரிதராய்ப் போமிடத்தில் விதி கோசரியாதே. (அயற் சேரியுள்ளாரும்) சிலுகு வாய்ச்சிகளான நம் சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்ய ஸ்த்ரீகளும். இவளிருந்தது ஓரூர் வாசியுங்கூட இல்லாதவர்கள். (எல்லே) கீழில் அவர்களை ஸம்போதித்ததாதல், இதோராச்சர்யமிருந்தபடியென்! என்றதாதல்.

விளக்கம் – (சில்லை வாய்ப்பெண்டுகள்) – “சிலுகு சிலுகு என்னும் பெண்கள்” என்றால், பலவிதமாகத் தூற்றிப் பேசும் பெண்கள். சிலுசிலுகு என்றால் சண்டை. அவர்கள் யார்? விஷயங்களைப் பற்றி வரும் அனைத்தையும் கூட, “உபாஸிக்கக் கடவன், த்யானிக்கக் கடவன்” என்பது போன்ற வசனங்கள் மூலம், ஸித்திக்கும் உபாயங்களில் சேரும் என்று எண்ணுபவர்கள். அவ்விதம் எண்ணுவார்களோ என்பதற்கு விடை அளிக்கிறார்; உபாய புத்தியால் வருவதற்கு அல்லவோ விதியானது பொருந்தும்படி உள்ளது? குணங்களுக்கு வசப்பட்டு, அவற்றால் தூண்டப்பட்டவர்களிடம் விதிகள் பொருந்தாது. (அயற் சேரியுள்ளாரும்) - சண்டையில் வாய் கொண்ட நம்முடைய இடத்தில் உள்ள பெண்களும், அடுத்த ஊரில் உள்ள மற்ற பெண்களும். அதாவது இவள் இருந்த ஊருடன் எந்தவிதமான ஸம்பந்தமும் அற்றவர்கள். (எல்லே) - கடந்த பாசுரத்தில் உள்ள மைனா போன்றவைகளையும், தோழியையும், சண்டையின் வாய் கொண்ட பெண்களையும் என்று பலரையும் அழைக்கிறார்கள். இது ஓர் வியப்பு ஆகும் என்கிறாள்.

வ்யாக்யானம் - (செல்வமித்யாதி) அவன் வரவை அஸத் ஸமமாக்கினாள். முற்பாடனாய் வந்தவனை, தான் நாலடியிட்டுப் பிற்பாடனாம்படி பண்ணினாள். அவன் ஸ்வரூபத்தை யழித்தாள். பரவ்யூஹாதிகளை விட்டு இங்கு வந்து கிடக்கிறது இவளுக்கு முற்பாடனாய் உதவுகைக்கிறே. (செல்வம் மல்கியவன் கிடந்த திருக்கோளூர்க்கே) நிரவதிக ஸம்பத்தானது கரைபுரளும்படியாக அவன் வந்து கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே. ரக்ஷ்ய வர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே அந்வயித்தாலிறே நியந்தாவினுடைய ஐச்வர்யம் ப்ரகாசிப்பது! (அவன் கிடந்த) அவன் வரவு பார்த்து இவளிருக்கை யன்றிக்கே, இவள் வரவு பார்த்து அவன் அவஸர ப்ரதீக்ஷனாய்க் கிடக்கிறபடி.

விளக்கம் – (செல்வமித்யாதி) - அவன் வந்து நின்றதை, வராதவன் என்பதற்குச் சமமாகக் கொண்டாள். இவளுக்கும் முன்பாக வந்து நின்ற அவனுக்கு முன்பாக, இவள் நான்கு அடி முன்னே சென்றவளாக, "அவனைப் பின்னர் வந்தவன்" என்று ஆக்கினாள். அவன் ஸ்வரூபத்தை அழித்தாள். பரத்வம் மற்றும் வ்யூஹம் போன்ற பலவற்றையும் விடுத்து, இங்கு வந்து அவன் கிடப்பது, இவளுக்கு முன்பாகவே வந்து நின்று உதவுவதற்கு அல்லவோ? (செல்வம் மல்கியவன் கிடந்த திருக்கோளூர்க்கே) - இதற்கு மேல் ஏதும் இல்லை என்னும்படி உள்ள ஸம்பத்தானது கரை புரளும்படியாக அவன் வந்து கண்வளரும் திருக்கோளூர். ஆனால் பரமபதத்திலும் செல்வம் உண்டாயிருக்க, இங்கு வந்து இவன் செல்வம் கரைபுரள்வது எப்படி என்பதை கூறுகிறார். தன்னால் பாதுகாக்கப்பட வேண்டிய பொருள்களுடைய பாதுகாத்தல் என்பதைத் தொடங்கினால் அல்லவோ, அந்தப் பொருள்களை மேற்பார்வையிடும் ஒருவனுடைய ஐச்வர்யம் ப்ரகாசமாக வெளிப்படும். (அவன் கிடந்த) - அவன் எப்போது வருவான் என்று இவள் எதிர்பார்த்து நிற்பதை விடுத்து, இவள் வருகையை எதிர்பார்த்து, அவன் தகுந்த காலத்திற்காகக் கிடக்கிறான்.

வ்யாக்யானம் - (மெல்லிடை நுடங்க) அவன் ஸ்ரூப ஜ்ஞாநமில்லாவிட்டால், தன் ஸ்வரூப ஜ்ஞாநமோதான் இவளுக்கு உண்டாயிருக்கிறது. இவளுக்கு விழுக்காடறியாமை எங்குமொத்தது கிடீர்! தன்னிடையை யறிந்தாளாகில் தான் புறப்பட்டுப்போமோ? நடுவே அறியாமல் புகுந்த பிழையிறே. (மெல்லிடை நுடங்க) ம்ருதுவான இடையானது துவளும்படியாக. இவ்விடையைக் கொண்டு இவள் நடக்கப் புக்கால் எதிரே புறப்பட்டு வரவேண்டாவோ? (இளமான்) போகிற வழியில் மிறுக்கும், தன் ப்ரக்ருதியும் அறிந்து மீளவல்ல பருவமல்ல கிடீர்! (செல்ல மேவினளே) போகவொருப்பட்டாள். இவள் கையிலும் இவர்கள் கையிலுமன்றிறே ப்ராப்தி கிடப்பது; அது அவன் கையதிறே; இத்தலையில் துணிவேயிறேயுள்ளது. கீழே "போனாள்" என்னாநின்றாள்; இங்கே "போக்கிலேயொருப்பட்டாள்" என்னாநின்றாள்; இது சேரும்படியென்? என்னில் - இவள் போகையிலே ஒருப்பட்டபோதே போய்ப்புக்காளன்றோ? என்கிறாள்.

விளக்கம் – (மெல்லிடை நுடங்க) - அவனுடைய "எந்தவிதமான காரணமும் இன்றி அனைத்தையும் காப்பாற்றும் தன்மை" என்ற ஞானம் இல்லாவிட்டாலும், தனது

சொந்த முயற்சியைப் பொறுத்துக் கொள்ளாத ஞானம் இவளுக்கு உள்ளது. இவளுக்கு ஒப்புமை அறியாமை என்பது, அவன் ஸ்வரூபத்தைப் போன்றே தனது ஸ்வரூபத்திலும் ஒத்ததே ஆகிறது. இது எப்படி என்பதற்கு விடை அளிக்கிறார். தனது நிலையை நடுவில் அறிந்தவள் என்றால், இவ்விதம் புறப்பட்டுச் செல்வாளோ? நடுவில் அறியாமல் வந்த பிழை அல்லவோ? (மெல்லிடை நுடங்க) - மெல்லிய இடை துவளும்படியாக. இப்படி மெல்லிய இடையைக் கொண்ட இவள் நடந்து செல்லும்போது அவன் புறப்பட்டு வரவேண்டாமா? ஆனால் அவன் செல்வக்கிடப்பால் வராமல் கிடந்தான். (இளமான்) - தான் செல்லும் வழியில் உள்ள மிறுக்குகள் மற்றும் தனது தன்மையை அறிந்து அவற்றிலிருந்து மீறுதல் போன்றவற்றை அறிந்து பிழைக்கவல்ல பருவம் கொண்டவள் அல்லள். (செல்ல மேவினளே) – பேறு கிட்டுவது என்பது, இவள் கையிலோ அல்லது இவர்கள் கையிலோ இல்லை அல்லவோ? அது அவன் கையில் அல்லவோ உள்ளது? அதாவது, இவளிடம் முயற்சி மட்டும் எதிர்பார்க்கப்படுகிறது; பேற்றுக்கான உபாயம், அவனுடைய நினைவே ஆகும். கடந்த திருவாய்மொழியில் “போனாள்” என்றாள்; இந்தத் திருவாய்மொழியில் “போக்கிலே புறப்பட்டாள்” என்றாள்; இது எப்படிப் பொருந்தும் என்பதற்கு விடை அளிக்கிறார்; இவள் அங்கு செல்வது என்று தீர்மானித்த உடனேயே, அங்கு சென்று சேர்ந்தாள் என்றே ஆகிறது.

வ்யாக்யானம் - (இளமான் செல்ல மேவினள் கொல்லையென்பர் கொலோ, குணம் மிக்கனளென்பர்கொலோ) அவள் கைகழிந்து கொடுநின்றாள்: இனியிருந்த நாம் என் கேட்கிறோமோ? இங்கிருந்த நாள் நம்முடைய ஹிதவசநங் கேட்கிலன்றோ வழியிலுள்ளார் பழி கேட்பது அவள். இவள் வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார் வார்த்தை கேட்கும்தொழியப் பெருவழியானார் வார்த்தை கேளாள்.

விளக்கம் – (இளமான் செல்ல மேவினள் கொல்லையென்பர் கொலோ, குணம் மிக்கனளென்பர்கொலோ) - அவள் அனைத்தையும் விட்டு அங்கு சென்றாள்; நாம் இங்கு இருந்தவர்களாக என்ன கேட்கிறோம்? ஆனால், செல்லும்போது வழியில் காண்பவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்கமாட்டாளோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இங்கு இருந்த நாம் கூறிய சொற்களைக் கேட்டிருந்தால் அல்லவோ வழிப்போக்கர்களுடைய பழிச்சொற்களை அவள் மதிப்பாள்? சரி, இவள், யார் கூறும் சொற்களைக் கேட்பாள் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; இவள் முன்பாக, இவள் செல்லும் வழியில், நம்முடைய ஊரில் சண்டையிடும்

பெண்களுடைய சொற்களைக் கேட்டாலும் கேட்பாள் அல்லாமல் மற்ற ஊரில் உள்ளவர்கள் சொற்களை அல்ல.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 1)

குறிப்பு: ஸ்ரீரிய:பதியான ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச்செய்த "பெரியாழ்வார் திருமொழி"க்கான ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளையின் ஸ்வாபதேச வ்யாக்யானமும், ஸ்வாமி பெரியஜீயருடைய வ்யாக்யானம் இங்கு தரப்பட்டுள்ளன. இவற்றுள், பெரியஜீயருடைய வ்யாக்யானத்திற்கான எளியநடை தரப்பட்டுள்ளது. சில இடங்களில் திருவாய்மொழிப்பிள்ளையின் வ்யாக்யானத்திற்கான எளியநடையும் உள்ளது. திருப்பல்லாண்டின் மூலத்துடன் தொடங்கப்பட்டுள்ளது.

திருப்பல்லாண்டு தனியன்கள்

நாதமுனிகள் அருளிச்செய்தது

குருமுகம் அநதீத்ய ப்ராஹ வேதாந் அசேஷாந்
நரபதி பரிக்லுப்தம் சுல்கம் ஆதாதுகாம:
ச்வசுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜ குல திலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி

பாண்டியபட்டர் அருளிச்செய்தவை

மின்னார் தடமதிள் சூழ் வில்லிபுத்தூர் என்று ஒருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம் - முன்னாள்
கிழி அறுத்தான் என்று உரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழி அறுத்தோம் நெஞ்சமே வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று
ஈண்டிய சங்கம் எடுத்து ஊத - வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழி அறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று

பெரியாழ்வார் அருளிச்செய்த
திருப்பல்லாண்டு (மூலம் மட்டும்)

1. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு * பல கோடி நூறாயிரம் *
மல்லாண்ட திண் தோள் மணிவண்ணா! *
உன் செவ்வடி (சேவடி) செவ்வி திருக்காப்பு
2. அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வல மார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு **
வடிவார் சோதி வலத்து உறையும் * சுடர் ஆழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்கும் * அப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

3. வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் * வந்து மண்ணும் மணமும் கொண்மின் *
கூழாட்பட்டு நின்றீர்களை * எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம் **
ஏழாட்காலும் பழிப்பு இலோம் நாங்கள் * இராக்கதர் வாழ் * இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே

4. ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து * எங்கள் குழாம் புகுந்து *
கூடு மனம் உடையீர்கள்! வரம்பு ஒழி * வந்து ஒல்லைக் கூடுமினோ **
நாடும் நகரமும் நன்கு அறிய * நமோ நாராயணாய என்று *
பாடு மனம் உடைப் பத்தருள்ளீர்! * வந்து பல்லாண்டு கூறுமினே

5. அண்டக் குலத்துக்கு அதிபதியாகி * அசுரர் இராக்கதரை *
இண்டக் (இண்டைக்) குலத்தை எடுத்துக் களைந்த * இருடீகேசன் தனக்கு **
தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்து அடி தொழுது * ஆயிர நாமம் சொல்லி *
பண்டைக் குலத்தை தவிர்ந்து * பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே

6. எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் * ஏழ் படி கால் தொடங்கி *
வந்து வழி வழி ஆட்செய்கின்றோம் ** திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரி உரு ஆகி * அரியை அழித்தவனைப் *
பந்தனை தீரப் பல்லாண்டு * பல்லாயிரத்தாண்டு என்று பாடுதுமே

7. தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி * திகழ் திருச்சக்கரத்தின் *
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று * குடி குடி ஆட் செய்கின்றோம் **
மாயப் பொரு படை வாணனை * ஆயிரந் தோளும் பொழி குருதி
பாயச் * சுழற்றிய ஆழி வல்லானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே

8. நெய்யிடை (நெய்யெடை, நெய்யடை) நல்லதோர் சோறும் *
நியதமும் அத்தாணிச் சேவகமும் *
கை அடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு * காதுக்குக் குண்டலமும் **
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து * என்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல *
பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப் * பல்லாண்டு கூறுவனே

9. உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்து * உடுத்து * கலத்தது உண்டு *
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன * சூடும் இத்தொண்டர்களோம் **
விடுத்த திசைக் கருமம் திருத்தித் * திருவோணத் திருவிழவில் *
படுத்த பைந் நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே

10. எந்நாள் எம்பெருமான் * உன் தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்கள் அடிக் குடில் வீடு பெற்று உய்ந்தது காண் **
செந்நாள் தோற்றித் * திரு மதுரையுள் சிலை குனித்து * ஐந்தலைய
பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே! * உன்னைப் பல்லாண்டு கூறுதுமே

11. அல்வழக்கு ஒன்றும் இல்லா * அணி கோட்டியர் கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப் போல * திருமாலே! நானும் உனக்குப் பழ அடியேன் **
நல்வகையால் நமோ நாராயணா என்று * நாமம் பல பரவி *
பல்வகையாலும் பவித்திரனே! * உன்னைப் பல்லாண்டு கூறுவனே

12. பல்லாண்டு என்று பவித்திரனைப் * பரமேட்டியைச் * சார்ங்கம் என்னும்
வில் ஆண்டான் தன்னை * வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் **
நல் ஆண்டு என்று நவின்று உரைப்பார் * நமோ நாராயணாய என்று *
பல் ஆண்டும் பரமாத்மனைச் * சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே

பெரியாழ்வார் திருமொழி ப்ரவேசம்

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச வ்யாக்யான அவதாரிகை

வ்யாக்யானம் - ஸ்ரீரிய:பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய், ஸர்வரக்ஷகனாயிருக்கிற ஸர்வேச்வரனை ரக்ஷ்யமாக நினைத்துத் திருவவதார விசேஷங்களுக்கு மங்களாசாஸநம் பண்ணினார் திருப்பல்லாண்டிலே; திருப்பல்லாண்டு (6) "அந்தியம் போதிலரியுருவாகி அரியையழித்தவனை - பல்லாண்டு பாடுதும்" என்றும், (3) "இராக்கதர் வாழிலங்கை பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், ஸ்ரீந்ருஸிம்ஹப்ராதுர்பாவத்துக்கும் ராமாவதாரத்துக்கும் மங்களாசாஸநம் பண்ணியிருக்கச் செய்தேயும், (7) "மாயப்பொருபடை வாணனை", (10) "ஐந்தலைய" இத்யாதிகளிலே க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரசுரமாக மங்களாசாஸநம் பண்ணுகையினாலேயும், இவ்வவதாரத்துக்கு ஹேதுவாக படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டருளின பெரியபெருமாள், அமல (9) "ஆலமாமரத்தினிலை மேலொரு பாலகனாய் ஞாலமேழுமுண்டா னரங்கத்தாவினணை யான்" என்றும், திருவாய் (5-4-2) "வையமுண்டாலிலை மேவு மாயன் மணி நீண் முடிப்பை கொள் நாகத்தணையான்" என்றும் கோயிலில் நின்றும் திருமாளிகையிலே புகுந்து வடபெருங்கோயிலுடையானாய்க் கண் வளர்ந்தருளுகையாலும், இரண்டாம் திரு (46) "பயின்றதரங்கம் திருக்கோட்டி" என்று கோயிலில் நின்றும் தங்கு வேட்டையாக எழுந்தருளித்திருக் கோட்டியூரிலே உரகமெல்லணையானாய் கண்வளர்ந்தருளுகையாலும், திருப்பல் (11) "அணிகோட்டியர் கோனபிமாக துங்கன் செல்வனைப் போல" இத்யாதிப்படியே இவ்வாழ்வாருக்கு மங்களாசாஸநத்துக்கு ஸஹகாரியான செல்வநம்பியோடே திருக்கோட்டியூர் ப்ரஸ்துதமாகையாலும், திருவாய் (9-10-7) "திருக்கோட்டியூரானே", "கன்றுகொண்டு விளங் கனியெறிந்து " என்று இது முதலாகப் பலவிடங்களிலேயும் "அவனே இவன்" என்று ஆழ்வார்கள் க்ருஷ்ணாவதார கந்தமாகத் திருக்கோட்டியூரை அருளிச் செய்கையாலும், திருப்பல் (10) "செந்நாள் தோற்றிச் சிலைகுனித்த திருமதுரையிற்" காட்டில் திருக்கோட்டியூர் உத்தேச்யமாகையாலும், க்ருஷ்ணாவதாரம் திருப்பாவை (25) "ஒருத்தி மகனாய்ப் பிறந்தோரிரவிலொருத்தி மகனாயொளித்து வளர"ச் செய்தேயும், பெரியாழ் (4-3-2)

“கஞ்சனும் காளியனும் களிறும் மருதுமெருதும் மடிய வஞ்சனையில் வளர்ந்த மணிவண்ணன்” என்று ஈச்வரத்வம் நடையாடுகையாலும், மற்ற அவதாரங்களுக்குக் காலமும் நன்றாய் தாமும் ராஜ குலத்திலே அவதரிக்கையாலும், பந்துக்களும் ராஜாக்களுமாய் பலவான்களுமாகையாலும், க்ருஷ்ணாவதாரத்துக்குக் காலமும் த்வாபராந்தமாய் பந்துக்களும் ஸாதுக்களான ஆயராய், முளைப்பதெல்லாம் தீப்பூண்டுகளாகையாலே மங்களாசாஸநம் வேண்டுவது க்ருஷ்ணாவதாரத்துக்கே யாகையாலும், அந்த க்ருஷ்ணன் அர்ச்சாவதாரமாய் நின்றவிடத்தில் அர்ச்சாவதாரம் அர்ச்சக பராதீந ஸமஸ்த வ்யாபாரமாய்ப் போருகையாலே மங்களாசாஸநம் மிகவும் வேண்டுவது அர்ச்சாவதாரத்திலே யாகையாலும், திருவாய் (5-4) “சென்னியோங்க”ளவும் இவர்க்கு அர்ச்சாவதார பர்யந்தமாக மங்களாசாஸநம் நடக்குமிறே.

பெரியஜீயர் அருளிச்செய்த
பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யாந அவதாரிகை

வ்யாக்யானம் - ஸ்ரீய:பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், ஸமஸ்த கல்யாணா குணாத்மகனாய், ஸர்வ ரக்ஷகனான ஸர்வேச்வரன், தமக்கு ஸந்நிஹிதனான வளவிலே, ப்ரணவத்தில் சொல்லுகிறபடியே அவனைத் தமக்கு ரக்ஷகனாகவும் தம்மை அவனுக்கு ரஷ்யபூதராகவும் அநுஸந்தித்து, ஸ்வசேஷத்வாநுரூபமான வ்ருத்தி விசேஷங்களை அவன் திருவடிகளிலே செய்யவமைந்திருக்க, அவனுடைய ஸர்வரக்ஷகத்வாதிகளை அநுஸந்திப்பதற்கு முன்னே, முகப்பிலுண்டான ஸௌந்தர்யாதிகளிலே ஆழங்காற்பட்டு அவனைக் குழைச்சரக்காக நினைக்கையாலும், “காலாதீதமான வஸ்து காலம் ஸாம்ராஜ்யம் பண்ணும் தேசத்திலே வந்து ஸந்நிஹிதமாவதே! இவ்வஸ்துவுக்கு என்ன தீங்கு வருகிறதோ?” என்னும் பயத்தாலும், அவனை ரக்ஷ்ய பூதனாக நினைத்து, தாம் ரக்ஷகராய் நின்று மங்களாசாஸநம் பண்ணுகிறவளவில், உபய விபூதி யுக்தனான நிலையிலே மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே, அவனை ஸம்ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாக ப்ரதிகூல பூயிஷ்டமான இத்தேசத்திலே வந்து அவதரித்துச் செய்தருளின சேஷ்டிதங்களை அதுஸந்தித்து, அதீதகாலங்களில் அபதாநங்களுக்கு உத்தரகாலத்திலே வயிறெரியும் ப்ரேம ஸ்வபாவராகையாலே திருவவதார விசேஷங்களுக்கு மங்களாசாஸநம் பண்ணியருளினார் திருப்பல்லாண்டிலே.

விளக்கம் - பெரியபிராட்டியாரின் நாயகனாய், அனைத்துவிதமான இச்சையும் நிறைவேறப்பட்டவனாய், அனைத்து திருக்கல்யாண குணங்களாலும் சூழப்பட்டவனாய், "அனைத்து நிலைகளிலும் அனைத்து விதங்களிலும் நான் காப்பேன்" என்ற விரதத்தோடே ஸர்வேச்வரன் உள்ளான். பெரியாழ்வார், தன்னை வல்லபதேவன் ஊர்வலமாகக் கொண்டாடின நேரத்திலே, ப்ரணவ மந்திரத்தில் சொல்லப்பட்டபடி, இப்படிப்பட்ட ஸர்வேச்வரனைத் தனக்குக் காப்பாற்றுபவனாகக் கொண்டும், அவனுக்குத் தன்னைக் காப்பாற்றப்படுபவராகவும் அளித்து விளங்கினார். இப்படியானதால், தனது இயல்பான அடிமை நிலைக்கு ஏற்றதான தொண்டுகள் பலவற்றை, அவனது திருவடிகளுக்கு என்றே செய்ய ஏதுவான சூழல் அமைந்திருந்தது. அனைத்து நிலைகளிலும் அனைத்து விதங்களிலும் காப்பாற்றும் அவனது தன்மையில் மட்டுமே நிலைத்து நின்று பொழுதினைக் கழித்து, சுகமாக வாழ்வதை விடுத்து, முன்னால் தெரிகின்ற எழில் உள்ளிட்ட திருக்கல்யாண குணங்களிலே மயங்கி ஈடுபட, அவனுடைய காப்பாற்றும் வல்லமையை மறந்து, காப்பு என்று ஏதும் அவனுக்கு இல்லையே என்று அச்சம் கொண்டார். "காலத்தைக் கடந்துள்ள ஒரு வஸ்து, காலம் ஆட்டிப்படைக்கும் நாட்டிலே வந்து, அருகாமையில் உள்ளதே! இந்த வஸ்துவுக்கு என்ன தீங்கு உண்டாகுமோ?" என்கிற பயத்தால், அவனைக் காப்பாற்றபட வேண்டியவனாகக் கொண்டும், தன்னைக் காப்பாற்றுபவராகக் கொண்டும் பல்லாண்டு பாடினார். இவ்வாறு விளங்க, இந்த உலகங்கள் (லீலா விபூதி) மற்றும் பரமபதம் (நித்ய விபூதி) என்கிற இரு ஐச்வர்யங்களோடே கூடியிருக்கிற அவனைக் காப்பிடாது, இந்த ஸம்ஸாரத்திலே ஒரு ஸம்சாரியாய் வந்த அவனைக் காப்பாற்றும் நோக்கத்திலே இருந்தார். துக்கங்களை மட்டுமே பிறப்பிக்க வைக்கும் இச்சையுடைய இந்த நாட்டிலே வந்து பிறந்து, அவன் செய்த லீலைகள் அனைத்தையும் நினைத்து, "தனக்கு முன்புள்ள காலங்களில் இவனுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கண்டு, தனது காலத்தில் வயிறு எரியும் அளவிற்குப் ப்ரேமை உடையவர்" என்பதால், அவனது அவதார லீலைகளுக்கு ஒரு காப்பாகத் திருப்பல்லாண்டு அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - அது தன்னிலும் திருப்பல் (6) "அந்தியம்போதி லரியுருவாகி யரியையழித்தவனைப் பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும்" என்றும், திருப்பல் (3) "இராக்கதர்வாழிலங்கை பாழாளாகப்

படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ராதுர்ப்பாவத்துக்கும் ராமாவதாரத்துக்கும் மங்களாசாஸநம் பண்ணினவளவன்றிக்கே; திருப்பல் (7) "மாயப்பொரு படைவாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதி பாயச்சுழற்றிய வாழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதும்" என்றும், திருப்பல் (10) "ஐந்தலைய பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதும்'" என்றும், இவர் ப்ராசுர்யேண மங்களாசாஸநம் பண்ணிற்று க்ருஷ்ணாவதாரத்துக்கேயிறே.

விளக்கம் - அதிலும், திருப்பல்லாண்டு (6) – அந்தியம்போதில் அரியுருவாகி அரியை அழித்தவனைப் பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும் - என்றும், திருப்பல்லாண்டு (3) – இராக்கதர் வாழ் இலங்கை பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதும் - என்றும், இப்படியாக நரசிம்ம அவதாரம் மற்றும் ராம அவதாரம் ஆகியவற்றுக்குக் காப்பிட்டு நிற்காமல்; திருப்பல்லாண்டு (7) - மாயப்பொரு படைவாணனை ஆயிரம் தோளும் பொழிகுருதி பாயச் சுழற்றிய ஆழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதும் - என்றும், திருப்பல்லாண்டு (10) - ஐந்தலைய பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதும் - என்றும் இவருக்கு மிகுதியான ப்ரேமத்தால் க்ருஷ்ணனுக்கே காப்பானது செய்தருளினார் (அதாவது, க்ருஷ்ணனுக்குக் காப்பிடும் நோக்கிலே மற்ற அவதாரங்களுக்குக் காப்பிட்டார்).

வ்யாக்யானம் - ஆழ்வார்களெல்லாரும் (க்ருஷ்ணாவதாரம்) என்றவாறே போர மண்டி யிருப்பர்கள். அதுக்கடி அல்லாத அவதாரங்கள் போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே "ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலோம்! பாவியேன்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே!" என்னும் இழவாலும், பரிவர்தேட்டமான அவதார மாகையாலே. அத்தை அநுஸந்திக்கையால் வந்த வயிற்றெரிச்சலாலும். ராமாவதாரத்திலே தகப்பனார் சம்பராந்தகனாய் ஏகவீரனா யிருப்பானொருவன், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகள், குடிதானே வன்னிய மறுத்திருப்பதொரு குடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார்வெழுத்தாக்கிக் கொண்டு இருப்பர்கள்; ஆகையாலே எதிரிகள் என்கிற சப்தமில்லை. இங்கு அங்ஙனன்றிக்கே, தமப்பன் ஒரு ஸாது வ்ருத்தன், பிறந்ததும் கம்ஸன் சிறைக்கூடத்திலே, வளர்ந்ததும் அவன் அகத்தருகே,

ஸ்ரீப்ருந்தாவநத்திலே எழும் பூண்டுகளகப்பட அஸுரமயமாயிருக்கும். ரக்ஷரானவர்கள் ஓரடி தாழநிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயாய்த்து அவன்படி யிருப்பது; இப்படியானால் வயிறெரியாதிரார்களே இவர்கள்.

விளக்கம் - ஆழ்வார்கள் எல்லோரும் க்ருஷ்ணன் மீது மிகுந்த விருப்பத்தோடு இருப்பார்கள். ஏன்? மற்ற அவதாரங்கள் போன்று அல்லாமல், ஒரே காலம் ஆகையாலும், “ஒரு செவ்வாய்க்கிழமை கடந்து போக க்ருஷ்ணன் அடையாமல் போய்விட்டேனே பாவியேன்! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போனதே” என்னும் இழப்பாலும், அன்புள்ள பலர் விரும்பி சூழப்பட்ட அவதாரம் ஆகையாலே, அதனை அனுபவிக்க இயலாது போனதே என்றும் நினைக்க எழும் வயிறு எரிச்சல் ஆகையாலும் ஆகும். ஏன் மற்ற அவதாரங்களில் இத்தகைய துடிப்பு இல்லாமல் க்ருஷ்ணாவதாரத்தில் மிகுதியாக உள்ளது? ராமாவதாரத்தில் - தகப்பனான தசரதன் பரபரப்புடன் உள்ளவன், ஈடு இணையில்லாத வீரம் உடையவன்; அவனது பிள்ளைகளும் ஆண்புலிகள்; இது மட்டும் அல்லாது, இக்ஷ்வாகு குலம் என்பது குறும்பினை மறுக்கும் ஒரு குலம்; இவை அனைத்தையும் கடந்து, காப்பாற்றும் குணம் ஓங்கியிருப்பதால், அயோத்தி நாட்டினைத் தாங்கள் தொண்டு செய்தவாறே காப்பாற்றுபவர்கள் ஆவர். இதனால், எதிரிகள் என்று ஒரு பேச்சுக்குக் கூட இடமில்லை. க்ருஷ்ணாவதராத்திலோ - தகப்பன் வஸுதேவன் ஒரு ஸாது; ஸாதுத்தன்மையை வளர்ப்பவன்; பிறப்பானது கம்சனின் சிறைச்சாலையிலே; வளர்ந்தது மற்றொரு வீட்டிலே; ப்ருந்தாவனத்தில் உள்ள சிறு செடிகள் உட்பட அனைத்தும் அசுரத்தன்மையோடே இருக்கும்; காப்பாற்றுபவர்கள் திறம் பட எவரும் இல்லாததால், பாம்பின் வாயிலே அவன் விழும்படியானது. இப்படியே க்ருஷ்ணன் வாழ்வு அமைந்துள்ளது. இதனாலேயும் வயிறு எரிந்தே உள்ளனர்.

வ்யாக்யானம் - அவர்களெல்லாரையும் போலல்லவிறே க்ருஷ்ணாவதாரத்தில் இவர்க்குண்டான ப்ராவண்யம். அதாவது, பெரியாழ் (5-4-11) “விட்டுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலன்” என்கிறபடியே தான் பிறந்தபடியும் வளர்ந்தபடியும் இவரைக் கொண்டு கொள்கைக்காக, அவன் இவர் திருவுள்ளத்திலே குடிகொண்டிருக்க, நாச் (8-10) “போகத்தில் வழுவாத புதுவையர்கோன்” என்னும்படி அவதாராநுபவமாகிற போகத்திலொன்றும்

நழுவாதபடி, பெரியாழ் (1-1-1) "கண்ணன்கேசவன் நம்பி பிறந்தினில்" என்று அவதார ஸமயமே தொடங்கி அதிலுண்டான ரஸமெல்லாம் தாமேமுற்றூட்டாக அனுபவித்தாரிறே. இனி, இவ்விஷயத்தில் பரிவிலும் வந்தால், அவர்களுக்கு அது காதாசித்கமாய் இவர்க்கு நித்யமாயிறே இருப்பது.

விளக்கம் - இவருக்கு உண்டான க்ருஷ்ணன் மீதான ஈடுபாடானது, மற்ற ஆழ்வார்கள் போன்றது அல்ல. அதாவது, பெரியாழ்வார் திருமொழி (5-4-11) "விட்டுசித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்" என்கிறபடியே, க்ருஷ்ணனாவன், தான் பிறந்தவிதம் மற்றும் வளர்ந்தவிதம் ஆகியவற்றை, இவரைக் கொண்டே வெளிப்படுத்த எண்ணியவனாக, இவருடைய மனத்திலே குடிகொண்டிருந்தான். இப்படி அவன் இருக்க, இவர் க்ருஷ்ணனைப் பெறாமல் போனதால் உண்டான துன்பத்தால் மிகுந்த ஈடுபாடு அடைந்து, அவ்வாறே அவன் அடையும் துன்பம் கண்டு வயிறு எரிச்சலால் பரிவு அடைந்தாரே அன்றி, நாச்சியார் திருமொழி (8-10) - போகத்தில் வழுவாத புதுவையர்கோன் - என்கிறபடியே, எவ்விதத்திலும் இவர் அவன் அனுபவத்தால் எழும் போகத்தில் நழுவாது இருந்தார். மேலும், பெரியாழ்வார் திருமொழி (1-1-1) - கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில் - என்று அவதார நொடித் தொடங்கி அதில் வரும் ரஸம் அனைத்தையும் தாமே முழுதுமாக அனுபவிக்காது, அதனைப் பிறர்க்குத் தெளியச் செய்யவும் செய்கிறார். இப்படிப்பட்ட க்ருஷ்ணாவதாரம் மீது மற்ற ஆழ்வார்களுக்கு ஏதோ ஒரு சமயம் பரிவு ஏற்படும், ஆனால் இவருக்கோ இத்தகைய பரிவானது எப்போழுதுமே உண்டாகி உள்ளது.

வ்யாக்யானம் - ஆக இப்படி க்ருஷ்ணாவதாராநுபவாதிகளிலே ப்ரவ்ருத்தரான இவர், இவ்வவதாரத்துக்கடி சொல்லுகிற விடத்தில், திருக்கோட்டியூரில் நின்றும் வந்து பிறந்தானென்பானென்? "ஏஷ நாராயண ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரிம்" என்று க்ஷீராப்தியில் நின்றும் வந்து பிறந்தானாகவன்றோ ப்ரமாணங்கள் சொல்லுகிறதென்னில், ஹிரண்யாஸுர பீடிதரான தேவர்கள் இங்கே திரளவிருந்து தன்னையே ரக்ஷகனாக அபேக்ஷிக்க, க்ஷீராப்திநாதன், இவர்கள் கோஷ்டியிலே எழுந்தருளி இவர்களுடைய ரக்ஷண சிந்தை பண்ணினமை தோற்றும்படி பெரியாழ் (4-4-4) "உரக மெல்லணையானா"ய்ப் பள்ளிகொண்டருளின ஸ்த்தலமாகையாலே அந்த

ஐக்யத்தைப் பற்றவும், திருப்பல் (11) “அல்வழக்கொன்றுமில்லா வணிகோட்டியர்கோன்” என்று தமக்கு மங்களாசாஸநத்துக்கு ஸஹகாரியான செல்வநம்பியோடே திருக்கோட்டியூர் ப்ரஸ்துதமாகையாலே அவ்வுகப்பைப் பற்றவும், திருக்கோட்டியூரைத் திருவவதார கந்தமாக அருளிச்செய்தவிதில் விரோதமில்லை.

விளக்கம் - ஆக, இப்படி க்ருஷ்ணனுடைய பிறப்பு தொடங்கி அவனது லீலைகளிலே ஈடுபடும் இவர், அவனது பிறப்பிடத்தைச் சொல்லும்போது, திருக்கோட்டியூரை விடுத்து வந்து பிறந்தான் என்று ஏன் சொல்லவேண்டும்? அதாவது அவன், ஹரிவம்சம் – (55-52) - ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: | நாகபர்யங்கம் உத்ஸ்ருஜ்ய ஹி ஆகதோ மதுராம் புரீம் - இந்த நாராயணன் திருப்பாற்கடலில், ஆதிசேஷன் என்னும் படுக்கையை விடுத்து வந்து மதுராபுரியில் பிறந்தான் – என்றல்லவோ ப்ரமாணங்கள் சொல்லுகின்றன? இது முரணாக ஆகாதா? இதற்கு விடை அளிக்கிறார். ஹிரண்யாஸுரனால் பீடிக்கப்பட்ட தேவர்கள் திருப்பாற்கடல் வந்து நின்று, நாராயணனைத் தங்களது காப்பாக வேண்டி நிற்க, அந்தத் திருப்பாற்கடல் நாதன், இவர்களோடு கூடி, இவர்களை எவ்வாறு காப்பாற்றலாம் என்று ஆலோசனைப் பண்ணியதெல்லாம் கண்ணுக்குப் புலப்படும்படி, பெரியாழ்வார் திருமொழி (4-4-4) - உரக மெல்லணையான் – என்பதற்கு ஏற்ப, பள்ளிகொண்ட இடம் திருகோட்டியூர் என்பதாலும், திருப்பல்லாண்டு (11) - அல்வழக்கு ஒன்றும் இல்லா அணி கோட்டியர் கோன் - என்று பெரியாழ்வார் காப்பிட்டதற்குக் காரணமாக இருந்த செல்வநம்பிக்கு, திருக்கோட்டியூர் விரும்பப்படும் இடம் ஆகையால், அவர் மேல் உள்ள உகப்பினால் திருக்கோட்டியூரைப் பற்றியதாலும், திருக்கோட்டியூரையே அவதார இடம் என்று கொண்டதில் எவ்விதமான முரணும் இல்லை.

வ்யாக்யானம் - இப்படி க்ருஷ்ணாவதார ரஸத்தை அநுபவிக்கிறவளவில் குஷிகளைப்போலே கரையிலே நின்று அவதார குண சேஷ்டிதங்களைச் சொல்லிப்போகை யன்றிக்கே, பாவநா ப்ரகர்ஷத்தாலே கோப ஜந்மத்தை ஆஸ்த்தாநம் பண்ணி, யசோதாதிகள் சொல்லும் பாசுரத்தைத் தாம் அவர்களாகிப் பேசி அனுபவித்துச் சொல்லுகிறார்.

விளக்கம் - இப்படி க்ருஷ்ணாவதார ரஸத்தை அனுபவிக்கிற நேரத்தில் க்ருஷ்ணனைப் பிள்ளையாகவும் கணவனாகவும் பாவித்து அனுபவிக்கும் அடியார்கள் கூட்டத்திலிருந்து விலகி, அவனது குணங்களையும் லீலைகளையும், ரிஷிகளைப் போல் நடுநிலையில் நின்று அனுபவித்து சொல்லுகிறாரா என்றால் இல்லை; பாவனையானது மிகுதியாக ஓங்க, ஆய்ச்சியராகி, பெரியாழ்வார் திருமொழி (1-1-9) - நான் மெலிந்தேன் நங்காய் - என்று யசோதையாகி, அவள் அனுபவத்தைச் சொல்லுகிறார்.

1-1-1. வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்க்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்து அளறு ஆயிற்றே

பொருள் – பலவிதமான இரத்தினக்கற்கள் இழைக்கப்பட்டதால், அழகு வெளிப்படும் மாடங்களால் சூழப்பட்டிருக்கும் திருக்கோட்டியூரிலிருந்து, மிகுதியான கேசத்தை உடையவனும் பரிபூர்ணமான குணக்கூட்டங்களை உடையவனுமான க்ருஷ்ணன், எல்லாவிதங்களிலும் கொஞ்சி விளையாடுவதற்கு ஏற்றபடி, இனிமையான ஸ்ரீநந்தகோபர் இல்லத்தில் வந்து பிறந்தான். அப்பொழுது, மகிழ்ச்சியினால் உகந்து, எண்ணெயும் மஞ்சள்பொடியும் சேர்த்து ஆய்ப்பாடியில் உள்ள ஒவ்வொருவரும், ஒருவர் மேல் ஒருவர் எதிர்த்துத் தூவினர். இதனால், க்ருஷ்ணனுடைய வீட்டின் முற்றம் எங்கும், இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து, கண்ணுக்கு இனியதான சேறாய் ஆனது.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம்

அவதாரிகை - க்ருஷ்ணாவதாரகந்தமான திருக்கோட்டியூரில் அர்ச்சாவதார பர்யந்தமாக மங்களாசாஸநம் பண்ணுகிறார் “வண்ண மாட”த்தால்.

வ்யாக்யானம் - (வண்ணமித்யாதி) பெரியாழ் (4-4-3) “வண்ண நன்மணியும்” இத்யாதிப்படியே நாநாரத்தங்களாலே சமைந்து அழகும் நிறமுடைத்தாகையாலே தர்சநீயங்களான மாடங்களாலே குழப்பட்ட திருக்கோட்டியூரில். (கண்ணன்) கண்ணில் கூர்மையுடையராய் நிபுணராயிருப்பாராலே பரிக்ராஹ்யமான தேவகீ புத்ர ரத்நம் த்ருஷ்டி கோசரமாகையாலே கண்ணனென்கிறார். (கேசவன் நம்பி)

அவனுடைய ஸர்வகாரணத்வத்தையும் விரோதி நிரஸநத்தையும் தாம் ஏறிட்டுக் கொள்ளுகையாலே அவன் போக்யதைக்கு மங்களாசாஸநம் பண்ணி, ப்ரசஸ்தகேசன், கல்யாண குணபூர்ணன் என்கிறார். (பிறந்தினில்) இன்-இல்-பிறந்து-ஸ்ரீமதுரையில் சிறைக்கூடம்போலே பொல்லாங்கில்லாதபடியாலே திருவாய்ப்பாடியில் பிறப்பை இனிய இல்லிலே பிறந்தென்கிறார்; திருக்கோட்டியூரில் வ்யாவ்ருத்தி சொல்லமாட்டாரே, ஆகையாலே சிறைக்கூடத்தில் வ்யாவ்ருத்தி திருவாய்ப்பாடிக்குண்டென்கிறார். (எண்ணெய் சுண்ணமித்யாதி) எள்ளில் நெய்யையும் மஞ்சள்பொடியையும் ஒருவர் மேலே ஒருவர் தூவியென்னுதல்; ஒருத்தர்க்கு ப்ரதியாக ஒருத்தர் தூவியென்னுதல், (கண்ணன் முற்றம்) க்ருஷ்ணன் அவதரித்தபோதே க்ருஹநிர்வாஹகன் பிள்ளையாக ஸ்ரீநந்தகோபர் நினைக்கையாலே கண்ணன்முற்றமென்னுதல்; இடமுடைத்தான தர்சநீயமான முற்றமென்னுதல், (கலந்தளறாயிற்றே) இவை தம்மிலே சேர்ந்து சேறாயிற்றென்கிறார்.

பெரியஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானம்

அவதாரிகை - திருவவதரித்தருளினவளவில் திருவாய்ப்பாடியிலுள்ளார் பண்ணின உபலாலநாதிகளை அநுஸந்தித்து இனியராகிறார் இத்திருமொழியில்.

விளக்கம் - க்ருஷ்ணன் பிறந்துபோது ஆயர்பாடியில் உள்ளவர்கள் எப்படியெல்லாம் கொஞ்சி விளையாடினார்கள் என்பதைக் எண்ணி இனிமை அடைகிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர்) பெரியாழ் (4-4-3) “வண்ணநன்மணியும் மரகதமு மழுத்தி நிழலெழும் திண்ணைசூழ் திருக்கோட்டியூர்” என்கிறபடியே நாநாவிதமான ரத்நங்களை அழுத்திச் சமைக்கையால் வந்த அழகை யுடைத்தான மாடங்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரில். (கண்ணன் கேசவன் நம்பி) ப்ரசஸ்த கேசனாய் பரிபூர்ணகுணனான க்ருஷ்ணன். (பிறந்தினில்) இன் - இல் - பிறந்து; ஸ்ரீமதுரையில் சிறைக்கூடம்போல் பிறந்தவிடம் தோன்றாமல் போகவேண்டாதே, எல்லா உபலாலநத்துக்கும் யோக்யமான ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகிற

இனிய இல்லிலே பிறந்து. அதவா, ப்ரஹ்ம ருத்ராதிகளுக்குக் காரணபூதனாய் பரிபூர்ண குணனானவன் க்ருஷ்ணனாய் வந்தவதரித்த வளவிலென்னவுமாம்.

விளக்கம் - (வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்) – பெரியாழ்வார் திருமொழி (4-4-3) - வண்ண நன் மணியும் மரகதமும் அழுந்தி நிழல் எழும் திண்ணைசூழ் திருக்கோட்டியூர் – என்பதற்கு ஏற்ப, பலவிதமான இரத்தினக்கற்களை நேர்த்தியாகப் பதித்து, மாடங்கள் அமையப் பெற்றிருப்பதால், அழகுடன் விளங்குகிறது. இப்படி அழகு வாய்ந்த மாடங்களால் சூழப்பட்டுள்ள திருக்கோட்டியூரில். (கண்ணன் கேசவ நம்பி) மிகுதியான கேசத்தை உடையவனாகவும், பரிபூர்ண குணத்தை உடையவனாகவும் உள்ள க்ருஷ்ணன். (பிறந்தனில்) – இன் + இல் + பிறந்து - மதுராவில் சிறைச்சாலைப் போல் தீமை என்பது சிறிதும் இல்லாமலும், எவரும் “போகமாட்டேன்” என்று சொல்லாத விதமாக, எல்லாவிதங்களிலும் கொஞ்சி விளையாடுவதற்கு இனிமையான ஸ்ரீநந்தகோபர் இல்லத்தில் பிறந்து. இதனை வேறுவிதமாகவும் கொள்ளலாம். நான்முகன், சிவன் ஆகியோருக்குக் காரணமாக உள்ளவனும், பரிபூர்ண குணங்களை உடையவனுமான ஸ்ரீமந்நாராயணன், க்ருஷ்ணனாக வந்து பிறந்தபோது.

வ்யாக்யானம் - (எண்ணெய் சுண்ணம் எதிரெதிர்தூவிட) எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் ஹர்ஷத்தாலே களித்து ஒருவர்க்கொருவர் எதிர்த்துத் தூவ. (கண்ணன் முற்றம்) க்ருஷ்ணனவதரித்தபோதே க்ருஹ நிர்வாஹகன் பிள்ளையாக ஸ்ரீநந்தகோபர் நினைத்திருக்கையாலே கண்ணனுடைய முற்றமென்னுதல்; (கண் நல் முற்றம்) இடமுடைத்தாய் தர்சநீயமான முற்றமென்னுதல், (கலந்தளறாயிற்றே) இவை இரண்டும் துவையுண்டு தன்னிலே சேர்ந்து சேறாய் விட்டது.

விளக்கம் - (எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிட) – எள்ளில் உள்ள நெய்யையும் மஞ்சள்பொடியையும் மகிழ்ச்சியினாலே உகந்து ஒருவர் மேல் ஒருவர் எதிர்த்துத் தூவி. (கண்ணன் முற்றம்) - க்ருஷ்ணன் பிறந்தபோதே ஸ்ரீநந்தகோபர், “இவனே நம்முடைய வீட்டினை நிர்வகிக்கப் போகிறான்” என்று நினைத்ததால், கண்ணனுடைய இல்லமானது. இத்தகைய க்ருஷ்ணனின் இல்லத்தின் முற்பகுதி எனலாம். அல்லது “கண் + நல் + முற்றம்” என்று கொண்டு, மிகுந்த இடம்

உள்ளதாகவும், கண்ணுக்கு இனியதாகவும் உள்ள முன்பகுதி எனலாம். (கலந்து அளறு ஆயிற்றே) - எண்ணெயும் மஞ்சளும் சேர்ந்து துவண்டு சேறாயிற்று.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)

(பகுதி – 1)

தனியன்கள்

திருக்கோளூர்நம்பி அருளிச்செய்தது

கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோக திவாகரம்
யஸ்ய கோபி: ப்ரகாசாபி: ஆவித்யம் நிஹதம் தம:

பொருள் - எவருடைய சொற்களில் உள்ள கிரணங்களாலே அறியாமையினால் உண்டாகும் இருளானது போக்கப்பட்டதோ, கலி மயக்கம் நசுக்கப்படுகிறதோ, எவர், உலகில் உழல்பவர்களுக்கு சூரியன் போல் உள்ளாரோ, அப்படிப்பட்ட பரகாலன் என்னும் திருமங்கையாழ்வாரைத் த்யானிக்கிறேன்.

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த வ்யாக்யானம்

அவதாரிகை - (கலயாமி கலித்த்வம்ஸம்) திருமொழி முதலான திவ்யப்ரபந்தோபகாரத்துக்குத் திருமங்கையாழ்வாரைத் திருவடி தொழும்படி சொல்லுகிறது.

விளக்கம் – பெரிய திருமொழி முதலான ஆறு திவ்யப்ரபந்தங்களைத் தந்த திருமங்கைமன்னனான கலியன் உதவியில் மயங்கி, அவருடைய திருவடியை வணங்கியமையைச் சொல்லுகிறது இந்தத் தனியன்.

வ்யாக்யாநம் - (கலயாமி கலித்த்வம்ஸம்) "கலிகன்றி" என்று நிரூபகத்தையுடையரான பரகாலகவியை, "கலயாமி - ப்ரணமாமி" என்கிறது. (லோக திவாகரம்) ஆதித்யன், பாஹ்யாந்தகாரத்தைப் போக்கும்; இவர் நாட்டார்க்கு பாஹ்யாப்யந்தராந்தகாரங்க ளிரண்டையும் போக்குவர். (யஸ்ய கோபி) யாதொருத்தருடைய, சடகோபாஷ்டகம் (4) "யத்கோ ஸஹஸ்ரம்" என்கிற மறையாயிரங்களினாலே; அவைதான் (ப்ரகாசாபி:) என்று பெருமாள் (1-11) "நடைவிளங்கு தமிழ்மாலை"யாய், பெரியதிருமொழி தனியன் "நெஞ்சுக்கிருள்கடி தீப"மாயிருக்கும். இப்படி ப்ரகாசகங்களான ஸ்ரீஸூக்திகளினாலே, திருமாலை (13) "அறிவிலா மனிச"ருடைய ஆவித்யத மநஸ்ஸு நிஹதமாயிற்று என்பது யாதொன்று, அத்தாலே அவரை (கலயாமி) என்கிறது.

விளக்கம் - (கலயாமி கலித்த்வம்ஸம்) – "கலிகன்றி" என்று கலி மயக்கத்தைப் போக்கடிக்கும் தனித்துவமான இயல்பை உடைய பரகால கவியை வணங்குகிறேன். (லோக திவாகரம்) - சூரியனானது வெளி இருளைப் போக்கும். இவர் உலகத்தில் உழலும் ஸம்ஸாரிகளுக்கு, வெளி உலகில் உண்டாகும் பற்று காரணமாக மனதில் உள்ள இருளைப் போக்குவார். எப்படி? (யஸ்ய கோபி:) - எவருடைய கிரணங்களினால்; சடகோப அஷ்டகம் (4) - யத் கோ ஸஹஸ்ரம் அபஹந்தி தமாமஸி பும்ஸாம் - எவருடைய வாக்குகளாகிய ஆயிரம் பாக்கள் உலகத்தவர்களுடைய இதயத்து இருளைப் போக்கடிக்கிறதோ – என்பதான ஆயிரம் பாசுரங்களால். எத்தகைய கிரணங்கள்? (ப்ரகசாபி:) - ஒளி பொருந்தியது; பெருமாள் திருமொழி (1-11) - நடை விளங்கு தமிழ் மாலை - என்பதாக வெளிப்பட்டு, "நெஞ்சுக்கு இருள் கடி தீபமாய்" விளங்குகிறது. இப்படிப்பட்ட ஒளி பொருந்திய வாக்குகள் செய்வது என்ன? (ஆவித்யம் நிஹதம் தம:) – திருமாலை (13) - அறிவிலா மனிசர் - என்று உலகத்தில் உள்ள ஸம்ஸாரிகளின் இதயத்தில் உள்ள இருளை போக்கடிக்கின்றன. இதனால் (கலயாமி) - நான் வணங்குகிறேன்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்